விலை 20/=

பக்கங்கள் 24


15 ஜூன் 2019

புதுமை : 03 விதி : 158


# புதுவிதி
# PUTHU VITHI

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'






ஒரு மரத்தின் இரு கிளைகள்



நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் பின்னணி என்ன?



மதத்தின் பெயரால் பகடை ஆடும் முஸ்லிம் அசியல்



காட்டின் காதல் மன்னன்



# ஒரு மரத்தின் இரு கிளைகள்

**யோகநாராயணன்**

*2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி மேற்கொள்ள ஆரம்பித்த அதிரடி நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசியலில் பல குழப்பங்களும் ஸ்திரமற்ற நிலைமையும் உருவாகியது. இடம்பெற்று வரும் அனைத்து அரசியல் விவகாரங்களிலும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான மோதலின் பின்னணி இழையோடுவதை அவதானிக்க முடிகிறது. இடம்பெற வேண்டிய தேர்தல்கள்கூடக் காலம் கடந்த நிலையிலும் நடக்குமோ, நடக்காதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.*

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்ற பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷ சகோதர ஆட்சிக்கு எதிராக ஒன்றிணைந்த பல்வேறு சக்திகள் மைத்திரிபால சிறிசேனாவை ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகவும் கொண்ட நல்லெண்ண ஆட்சி உருவாக்கப்பட்டது. எனினும் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே மெல்ல வளர்ச்சி பெற்ற அதிகாரப் போட்டியும் முரண்பாடுகளும் முற்றி வெடித்த நிலையில் ரணில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பின்பு நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் அவருடன் அவரது தலைமையிலான அமைச்சரவையும் பதவியேற்றனர்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ இல்லாத அமைச்சரவையைக் கொண்ட அரசாங்கம் அமைக்கப்பட்டது. ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை அடுத்து அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஆளுநர்களான அசாத்சாலி, ஹிஸ்புல்லா ஆகியோரும் பதவி விலக்கப்பட வேண்டுமென்ற எதிரணியினரின் கோரிக்கைகள் வலிமை பெற்ற அதே வேளையில் பௌத்த மத குருமாரின் போராட்டங்களும் வெடித்தன. அது அத்துரலிய ரத்ன தேரரின் உண்ணாவிரதப் போராட்டத்துடனும், ஞானசார தேரரின் மிரட்டல்களும் உரிய கட்டத்தை எட்டின. அந்த நிலையில் எவருமே எதிர்பாராத முறையில் ஒட்டுமொத்தமாக கட்சி பேதங்களையெல்லாம் ஒதுக்கி விட்டு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், ஆளுநர்கள் என அனைத்து முஸ்லிம் அரசியல் தலைமைகளும் தங்கள் பதவிகளை விட்டு விலகிக் கொண்டனர்.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெளியேறி விட்ட நிலையில் தற்சமயம் முஸ்லிம் தரப்பும் இல்லாத நிலையில் இனி ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியும் மட்டுமே கொண்ட ஒரு அமைச்சரவையே உருவாகியுள்ளது.

அதாவது தற்சமயம் எஞ்சியுள்ள அதிகார பீடங்களாக நிறைவேற்று அதிகாரமும், ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரவையுமாகக் சுருங்கி விட்டன. ஆனால், அதிகாரபீடங்கள் சுருங்கி விட்ட நிலையிலும் அதிகாரப் போட்டியும் முரண்பாடுகளும் மேலும் மேலும் விரிந்து கொண்டே செல்கின்றன.

இப்படியான ஒரு நிலையில்தான் ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக, அவற்றைத் தடுக்க வாய்ப்பிருந்தும் அவற்றைத் தடுக்க நடவடிக்கை உரிய முறையில் எடுக்கப்படாமை தொடர்பாக நடத்தப்பட்டு வரும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளிலும் இந்த மோதல்களும், முரண்பாடுகளும் கரங்களை நீட்டியுள்ளன.

இதுவரை இடம்பெற்ற விசாரணைகளில் வெளிவந்த சில தகவல்களின் அடிப்படையில் பல மர்மங்கள் எதிர்காலத்தில் வெளிப்படக் கூடும் என்ற கருத்து மேலெழுந்த நிலையில் விசாரணைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கட்டளையிட்டுள்ளார். எதிரணியினரும் இதன் மூலம் புலனாய்வாளர்கள் காட்டிக்கொடுக்கப்படுகிறார்கள் எனப் பலத்த கூச்சலிட்டு வருகின்றனர்.

ஆனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நிறுத்த ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லையெனக் கூறப்பட்டு விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. மீண்டும் ஒருமுறை நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்குமிடையே மோதல் உருவாகக்கூடுமோ என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

இன்று நாட்டில் முடிந்த, தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற வன்முறைகளிலும், உயிர் பலிகளிலும் ஒருபுறம் தேசிய தௌபீக் ஜாமாத் என்ற இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பும், மறுபுறம் பௌத்த - சிங்கள அடிப்படைவாதிகளான பொதுபல சேனாவும் அவர்களுடன் இணைந்த பௌத்த அமைப்புக்களும், அவர்களைப் பின்னின்று இயக்கும் அரசியல் சக்திகளுமே என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளும், பௌத்த - சிங்கள பேரினவாதிகளும் வெளிப்படையில் நேரெதிரான நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டதாகத் தோற்றமளித்தாலும் இந்த இரு தரப்பினரதும் நடவடிக்கைகளின் விளைவுகள் சாதாரண மக்களின் உயிர்களைப் பலி கொள்ளுதல், சொத்துக்களை அழித்தல் - சூறையாடுதல், வழிபாட்டுத் தலங்களைச் சேதப்படுத்துதல், வழிபாடுகளுக்கு இடையூறு செய்தல் என்பவற்றின் மூலமாக ஒட்டு மொத்தத்தில் இனங்களுக்கிடையேயான விரோதங்களையும், வெறுப்புணர்வையும், ஒருவர் மீது மற்றவருக்கும் சந்தேகத்தையும், அச்சவுணர்வையும் ஏற்படுத்துவதேயாகும். இதற்கு தேசப்பற்று, மதப்பற்று எனப் பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டாலும் இவற்றின் அடித்தளத்திலிருந்து அழிவுகளை மட்டுமே அறுவடை செய்ய முடியும்.

எனவே இந்த இரு அடிப்படை வாதங்களுமே ஒரு மரத்தின் இரு கிளைகள் என்பதில் சந்தேகப்பட இடமில்லை. இன்னும் சற்று மத, இன மாயைகளைக் கனைத்து விட்டுப் பார்த்தால் எதிரெதிரான இந்த இரு தரப்புகளுக்கும் ஒரே மூலத்திலிருந்து போசனையூட்டப்பட்டமையும் பசளையிட்டு வளர்க்கப்பட்டமையும் புரிந்து கொள்ள முடியும்.

முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டு வந்தது பொதுபலசேனா. கொழும்பில் அதன் தலைமை காரியாலயத்தை அமைக்க நிதியுதவி செய்ததுடன் அதன் தலைமை செயலகத்தைத் திறந்து வைத்தது அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ என வெளிவந்த செய்திகளை நாம் மறந்து விட முடியாது. அதேவேளையில் அவர் தேசிய தௌபீக் அமைப்பின் தலைமைச் செயலகம் அமைக்க கொழும்பில் சங்கராம மாவத்தையில் காணி ஒன்றை வழங்கியிருந்தார் என்பதும் அண்மையில் வெளிவந்தது. அவரும் அதை இன்று வரை மறுக்கவில்லை.

இதில் ஒன்றுக்கொன்று நேரெதிரான அமைப்புகளுக்கு நாட்டில் உயர் அதிகாரத்தில் உள்ள ஒருவரால் செயலகங்கள் அமைக்க உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அப்படியான நிலையில் அந்த அமைப்புகளின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த விளைவுகள் அந்த நபருக்கோ அல்லது அவருக்கும் அவரைச் சார்ந்த நபர்களுக்கும் சாதகமாகவே அமையும் என்பதை நம்பாமல் விட முடியுமா?

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்னாள் பயங்கரவாதத் தடைப்பிரிவின் பணிப்பாளர் நாலக டீ சில்வா சாட்சியளித்த போது, தேசிய தௌபீக் ஜமாத் அமைப்புப் பற்றி 2014 ஆம் ஆண்டே தான் அறிந்திருந்ததாகவும் காத்தன்குடியில் இடம்பெற்ற ஒரு மோதலை அடுத்து சஹ்ரான் தேடப்பட்டு வந்த நிலையில் அவர் தலைமறைவாகி விட்டாரெனவும் இதையடுத்து தான் நீதிமன்றில் பிடியாணை பெற்றிருந்ததாகவும் தெரிவித்திருந்தார். மேலும் அவ் விடயம் தொடர்பாக வாரா வாராம் நடந்த பாதுகாப்பு தரப்பு கூட்டங்களில் அறிக்கை சமர்பித்ததாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும், தான் ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஆகியோரைக் கொலை செய்ய முயன்றேன் என நாமல்குமார என்பவரின் முறைப்பாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதை அடுத்து என்ன நடந்ததெனத் தனக்குத் தெரியாதெனவும் கூறியிருந்தார். அதேவேளையில் மினுவாங்கொடையில் இடம்பெற்ற வன்முறைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

அவரின் சாட்சியத்தின் அடிப்படையில் சஹ்ரான் கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்காக ஏதோ ஒரு நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கி வழி நடத்தப்பட்டதற்கான தொனி தென்படுவதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சிப்லிபாறுச் இலங்கை ஐக்கியத்துக்கான உலமா சபையின் தலைவர் றில்வி முன்னாள் பாதுகாப்பு செயலர் கோட்டாபயவைச் சந்தித்து 2014 இல் பயங்கரவாத ஊடுருவல் பற்றி ஆதாரங்களுடன் தெரிவித்ததாகவும் கூறியிருந்தார்.

அதேவேளையில் அமைச்சர் ராஜித சேனநாயக்க தேசிய தௌபீக் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த 26 பேருக்கு புலனாய்வுப் பிரிவால் மாதந்த சம்பளம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தன. அது மட்டுமின்றி வவுணதீவில் சஹ்ரானின் சாரதியான கபூர் என்பவரால் இரு பொலிஸார் கொலை செய்யப்பட்ட

**(22ஆம் பக்கம் பார்க்க)**

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 15 ஜூன் 2019 | விதி : 158




# சம்பந்தனின் அந்த எட்டு நிமிடங்கள்...!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மாலைதீவு சென்று திரும்பும் வழியில் இலங்கையிலும் இறங்கி நான்கு மணிநேரத்தைச் செலவு செய்து ஜனாதிபதியுடனும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள உறவை உறுதிபடுத்துவது தொடர்பாகவும், சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பது பற்றியும் பேச்சு நடத்தியதுடன் ஜனாதிபதி மாளிகை முன்றலில் ஒரு அசோக மரக்கன்றையும் நட்டிருந்தார்.

இதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பையும் மறந்து விடாமல் அவர்களுடனும் எட்டு நிமிடங்கள் பேச்சுக்களை நடத்தினார். இதில் எல்லோரும் ஏற்கத்தக்க ஓர் அரசியல் சாசனத்தை இலங்கைக்கு உருவாக்குவதில் இந்தியா அக்கறை காட்ட வேண்டுமெனவும், பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே புதிய அரசியல் சாசனத்தில் பௌத்த மதத்துக்கு முதலிடம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் இலங்கை ஒரு பௌத்த நாடு என ஏற்கப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டதா என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பலாலி, சர்வதேச விமான நிலையம் ஆக்கப்பட்டால் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளுக்கு வாழைக்குலை, வெங்காயம், மிளகாய் ஏற்றுமதி செய்ய முடியுமோ எனத் தெரியவில்லை. அப்படியானால் இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நல்ல விளை நிலங்கள் விடுவிக்கப்படுமோ என்றும் சிலர் கேட்கின்றனர். ஆனால், விமான நிலைய விஸ்தரிப்புக்காக மேலும் காணிகள் அபகரிக்கப்படுமென்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம் என்பன பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவை ஆதலால் அவை பற்றி எதுவும் பேசப்படவில்லைப் போல் தோன்றுகிறது.

# புத்த துறவியிடம் 10 கோடி கப்பம்

தம்புள்ள ரஜமகா விகாரையின் பீடாதிபதி அக்குரண சுமணங்கல தேரரிடம் 10 கோடி ரூபா கப்பம் தரும்படியும், தராவிட்டால் கொலை செய்யப் போவதாகவும் தொலைபேசியில் மிரட்டப்பட்டது.

இது தொடர்பாகப் பொலிஸார் நடத்திய விசாரணையில் இதை ஜமாத் அமைப்பை என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களே மேற்கொண்டதாகவும் இவர்களில் ஒருவர் 19 வயது இளைஞர் எனவும் கூறப்படுகின்றது.

சுமணங்கல தேரர் தம்புள்ள பள்ளிவாசலை இடிப்பதில் தலைமை தாங்கிச் செயற்பட்டவர் என்பதும் அந்த இடத்தைப் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி மசூதியை நிரந்தரமாக அகற்ற முன்னின்று செயற்படும் வீரநாயகர் என்பது குறிப்பிடத்தக்கது.


கையில் திருவோடும், விசிறியும் கொண்டு மட்டுமே தேரர்கள் இருப்பார்கள் பத்துக் கோடியை வைத்திருப்பார்களா என ஆச்சரியப்படுகின்றனர் மக்கள்.

ஏற்கனவே வடமேல் மாகாணத்தில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட வன்முறை போன்று தம்புள்ளவிலும் மேற்கொள்ளும் முகமாக இது இட்டுக்கட்டப்பட்ட கதையாய இருக்குமோ எனச் சில முஸ்லிம் வர்த்தகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே முஸ்லிம்கள் மேல் தொடரப்பட்ட அநீதிகளே சஹ்ரான் போன்றவர்களை உருவாக்க அடித்தளமிட்டன. மீண்டும் மீண்டும் சஹ்ரான்களை உருவாக்கி நாட்டைக் குழப்ப நிலையில் வைத்திருக்கும் நோக்கம் கொண்ட சதியோ எனவும் சிலர் சந்தேகப்படுகின்றனர்.

# கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இருதய அறுவைச் சிகிச்சை

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் வெளிநாடு செல்ல நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளார். ஏற்கனவே இருதயம் பற்றரி மூலம் இயங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் அதன் காலம் முடிவடைய இருப்பதானாலேயே அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நீதிமன்றம் வழக்கை ஒத்தி வைத்து வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியுள்ளது.



இதைக் கேள்விப்பட்ட அரசியல்வாதி ஒருவர் பற்றரி இருதயமே இப்படி அதிகாரம் என்றால் சொந்தமாக இருக்கும் இருதயம் எப்படி இருக்கும் என மிரண்டே போனார். அதைச் சொல்லும்போதே அவரின் குரல் நடுங்கியது.

அவர் பூரண சுகம் பெற்று நாடு திரும்ப வேண்டுமென பொதுபலசேனா, சிங்க லே, இராவணபலய போன்ற பௌத்த வன்முறை அமைப்புக்கள் பிரித் ஓத இதுவரை ஏற்பாடுகள் எதையும் செய்ததாகத் தெரியவில்லை.

சில முஸ்லிம் மக்கள் கோட்டாபய சுகம் பெற கடவுளை வேண்டி முஸ்லிம்கள், சிலரை சில கடும் போக்காளர் பலி கொடுப்பதாக இரகசிய நேர்த்தி வைத்திருப்பார்களோ என அச்சமடைந்துள்ளதாகவும்தெரிய வருகிறது. பௌத்த குருமார் மிருகபலிக்கு எதிரானவர்கள் ஆதலாலேயே மனித பலி பற்றிய பயம் ஏற்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும் ஊடகவியலாளர் கருத்து வெளியிடுகையில் அவர் கட்டாயம் சுகம் பெற்று வர வேண்டுமெனவும், அவர் இருந்தால் வன்முறைகள், கொலைகள் போன்ற அதிரடிச் செய்திகளுக்கும் பஞ்சமிருக்காதெனவும், தங்களுக்கும் நல்ல வியாபாரம் போகுமெனவும் தெரிவித்தார்.


கல்லுனி மங்கன் போற வழி
காடுமேடெல்லாம்
தவிடு பொடி

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்





































புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## பிசாசு என்று தெரிந்தும் கட்டிப்பிடிக்கத் துணியலாமா?

2009 மே 19

'பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டிவிட்டோம்', என்று கொக்கரித்தது சிங்களப் பேரினவாதம். ஆனால், விடுதலைப் புலிகள் தொடுத்த போர் பயங்கரவாதமல்ல, விடுதலைப் போராட்டமே என்பதை சிங்கள தேசமும் - சிங்களப் பேரினவாதிகளும் உணர்ந்துகொள்ள 2019 ஏப்ரல் 21 அவர்களுக்கு தேவைப்பட்டது.

பிரபாகரன்

இவரும் நம்மைப் போன்ற மனிதர்தான். தனது இனத்துக்கு எதிராக நாம் நடத்திய கொடூரங்களுக்கு எதிராகவே போர் நடத்துகிறார். விடுதலைப் புலிகள் இராணுவத்தைத் தவிர மக்களை இலக்காகக் கொண்டு தாக்குதல்களை செய்யவில்லை. 'இலங்கையைக் காப்பாற்ற பிரபாகரன் தேவை', என்று சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகம் என்று இன்றைய தமிழ் மக்கள் அடையாளம் காட்டக்கூடிய வண. கலகொட அத்த ஞானசார தேரரே கூறுகிறார் என்றால்! அதை அவர் உணர சஹ்ரான் என்ற அடிப்படைவாதி ஒருவர் தேவைப்பட்டார்.

இலங்கைத் திருநாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்ற இனத்தவர்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என தத்தம் மனதுக்குப் பிடித்த மதங்களைப் பின்பற்றி வாழ்கிறார்கள். இந்த இன, மதத்தவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கி உள்ளார்கள். ஒருவரின் உரிமைகளை ஒருவர் மதித்தே வாழ முடியும் என்ற உண்மையை பல தரப்பினரும் மறந்து விடுகிறார்கள். இவ்வாறு ஒருவரின் உரிமைகளை மற்றவர் மதிக்காமல் போனதன் விளைவு அனைவருக்கும் தெரியும். அப்படி ஒரு நீண்ட போர் - அவலம் - துன்பம் இந்த நாட்டுக்கு இனியும் வேண்டாம் என்பது பாதிக்கப்பட்ட தமிழினத்தின் முடிவு மட்டுமல்ல அனைத்து இன, மத மக்களின் முடிவும்கூட. ஆனால், இந்த அனைவரினதும் முடிவும் - விருப்பமும் நிறைவேற குறிப்பிட்ட சில தரப்பினர் விரும்பவில்லை.

இதில், கொடுமை என்னவென்றால், நாட்டின் அதிகாரம் - மதங்களின் முக்கிய பொறுப்பு - சமூக வழிகாட்டிகள் - புத்திஜீவிகள் மற்றும் பல முக்கிய பொறுப்புகளில் இந்தத் துர்சக்திகளின் ஆதிக்கம்தான் நிறைந்து உள்ளது. இவ்வாறு இந்தத் துர்சக்திகளை ஓரங்கட்டாமல், அவற்றின் ஏமாற்றுகளையும் - பசப்புகளையும் மக்கள் இன்னமும் நம்புவதன் விளைவே, இன்றைய நிம்மதியற்ற - அமைதியற்ற - ஒற்றுமையற்ற நாட்டின் நிலை.

ஆனால், இந்நிலைக்கு முக்கிய காரணம் சிங்கள - பௌத்த பேரினவாதமே. நாட்டின் பெரும்பான்மையினர் இவர்களே. குடும்பத்தின் மூத்த அண்ணனைப்போல் சக சிறுபான்மை இனங்களை அரவணைத்துச் செல்ல வேண்டிய இவர்கள் அடக்கியாளவே முற்படுகிறார்கள். சிறுபான்மை இனங்கள் தமக்குக் கைகட்டி, வாய்பொத்தி சேவகம் செய்ய வேண்டும் என்ற பேரினவாத அடிப்படைவாதக் கோட்பாட்டுடன் உலா வரவே துடிக்கிறார்கள்.

தங்களது இந்த உலாவுக்காக சிறுபான்மை இனங்களான தமிழரையும் - முஸ்லிம்களையும் கூறுபோட்டு - துண்டாடி - ஓர் இனத்துடன் மற்றோர் இனத்தை மோதவிட்டு தமது ஆதிக்க ஆசையை நிறைவேற்றிவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே எண்ணம். தமிழருக்கு எதிரான போரில் தமிழருடன் கைகோத்து நின்ற முஸ்லிம்களை பிரித்து - எதிராகப் பயன்படுத்த சிங்கள - பௌத்தத்தால் முடியுமாக இருந்தது. முஸ்லிம்களுக்கு எதிராகத் தற்போது பின்னப்படும் போர் வலையில் தமிழர்களை விழுத்தவும் சதி பின்னப்படுகின்றது. பிசாசு என்று தெரிந்தும் தமிழர்கள் கட்டியணைப்பார்களா...?

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 55

- வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா

என்னுடைய கூடாரத்திற்கு ஒரு கையில் பிள்ளையுடனும் ஒரு கையில் தண்ணீர் கலனுடனும் வந்து சேர்ந்தேன். கணவரும் மகனும் முடிந்தளவு தண்ணீர் பெற்று காகக்குளியல் ஒன்றை மேற்கொண்டு சுத்தமாக நின்றனர். கொண்டுவந்த தண்ணீரில் சிறிதளவு எடுத்து குழந்தையைக் குளிக்க வைத்தேன். எனக்கும் குளிக்க வேண்டும் போலிருந்தது. தண்ணீர் பெறும் இடங்கள் சனத்திரளால் நிரம்பி வழிந்தது.

காலைச் சாப்பாடு பார்சல் மூலம் வந்தடைந்தது. ஆடு, மாடுகள் குழை நீட்டினால் எகிறிக்குதித்தோடுவது போல மக்கள் ஓடத்தொடங்கினர். குழாய்க் கிணற்றடி சனசந்தடியற்று வெறுமை பூண்டது. நானும், தோழியும், தோழியின் மாமியும், இன்னும் சிலரும் ஆசைதீரக் குளித்தோம். நிறைய தண்ணீரையும் கிடந்த பாத்திரங்களில் ஏந்திக்கொண்டு தறப்பாள் கூடாரமான எமது தற்காலிக வீட்டை அடைந்தோம்.

எங்கள் கூடாரத்தின் முற்பு ஒரு பாலைமரம் குடைபிடித்து நிழல் தந்தது. சில இடங்களில் மரங்களே இல்லை. பாதை ஓரமாக நிறைய மரங்கள் நிழல் பரப்பியதால் அங்கு கூடியிருந்து கதைக்கவும் தொடங்கினர். அப்படி இருக்கும்போது லொறிகள் வரும் உடைகள் நிறைந்த பொதிகள் வந்தன. பாய்ந்து விழுந்து வாங்கினர். நானும் முடிந்தளவு வரிசையில் நின்று பொருட்களையும் உணவுகளையும் பெற்றுக் கொண்டேன்.

சிறுமியாக இருந்த போதும் யுவதியான போதும் கோவில்களில் பொங்கல் பெறுவதற்குக்கூட வெட்கப்பட்டு அவற்றை தவிர்த்திருக்கிறேன். காலம் வெட்கத்தை மூட்டைகட்டி தலையில் வைத்து வரிசையில் நிற்க வைத்து விட்டது. கொண்டு வருபவர்களிடம் உணவுப் பொருட்களை, உடைகளை வாங்கினாலேயே மாற்றி உடுக்கவும் முடியும் என்ற நிர்ப்பந்தம் இருந்தது.

சிலருக்கு போதியளவு பொருட்களும் சிலருக்கு மேலதிகமாகவும் சிலருக்கு எதுவும் அற்ற நிலையும் நிலவியது. எல்லோருக்கும் எல்லாமும் சென்றடைய வழி ஒன்று பிறக்காதா? இப்படி சிலர் யோசித்தோம். முடிந்தளவு வரிசையில் நின்று பொருட்களை வாங்கும்படி வேண்டுகோள் விடுத்தோம். சிலர் ஏற்றுக்கொண்டார்கள். சிலர் காட்டுமிராண்டிகளாகவே நடந்தார்கள்.

முகாமிற்கு சென்று நான்கு நாட்களின் பின் வலயத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு கிராம அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் மூலம் குடும்பப்பதிவுகள் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டது. ஒரு கூடாரத்திற்குள் நான்கு குடும்பம் இருக்க வேண்டும் என்ற கட்டாய நிலை உருவாகியது. இதனால் எங்களுடன் இன்னுமொரு இரண்டு பேர் கொண்ட குடும்பம் இணைந்து கொண்டது. தோழியும் மாமியாரும் தாங்கள் தனியாக இருந்த கூடாரத்தை விட்டு எம்முடன் இணைந்து கொண்டார்கள். பத்துக்குப் பத்து அடி கொண்ட தறப்பாள் கூடாரத்தில் நான்கு குடும்பம் இருப்பது எவ்வளவு அசௌகரிகம்.

எங்கள் நான்கு குடும்ப அட்டைகளின் மொத்த எண்ணிக்கை ஒன்பதாக இருந்தது. ஆனால் சிலரது நான்கு குடும்பத்தின் எண்ணிக்கை இருபது தொடக்கம் இருபத்தைந்தாகவும் இருந்தது. மாமன், மச்சான், தாய், பிள்ளை, சித்தி, சித்தப்பா என கூட்டுக்குடும்பமாக கூடி இருந்து விட்டு சின்னச்சின்ன கதைவழிக்கும் சண்டை பிடித்தார்கள். மண்ணில் புரண்டு அடிபட்டார்கள். பாத்திர பண்டங்களை உடைத்தார்கள். பிறருக்கு இலவச திரைப்பட காட்சி காட்டி விட்டு ஓரிரு நாளில் கூடிக்கொண்டாடினார்கள். சமதானமாகினார்கள். மனித உறவு நிலையின் புதிய பரிமாணங்களை முகாம் வாழ்வு கற்றுத்தந்தது.

இடப்பெயர்வும் உயிரிழப்புகளும், உடைமைகள் இழப்பு, வாழ்விட இழப்பு, உரிமையோடும் அச்சமின்றியும் வாழ்ந்த வாழ்வு நிலையும், எல்லாப் போராளிகளையும் தம் பிள்ளைகள் போல பார்த்துப் பார்த்து உணவிட்ட மக்கள் இப்போது வேறு மாதிரிப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். அதற்குப் போராளிகளில் வெகுசிலரின் இறுதிநேர நடவடிக்கைகளும் காரணமாக அமைந்துவிட்டன.

முகாமிற்குள் ஒரு சில போராளிகள் காட்டிக் கொடுப்பாளர்களாக மாற்றப்பட்டிருந்தனர். போராளிகளில் சிலர் மட்டுமல்ல பொதுமக்களில் சிலரும் இந்தத் துரோக வேலையில் ஈடுபட்டார்கள். சிலர் காட்டிக் கொடுப்பதன் மூலம் தங்கள் தனிப்பட்ட பகைகளைக்கூட தீர்த்துக் கொண்டனர். வன்னி நிலப்பரப்பு எங்கும் மக்கள் வேறு புலிகள் வேறல்ல. மக்களே புலிகள். புலிகளே மக்கள். என்ற கோசத்தை இடப்பெயர்வின் பிந்திய நாட்கள் உடைத்தெறிந்து மக்கள் வேறு புலிகள் வேறு என்ற நிலைக்குத்தள்ளியது.

முகாமில் மக்கள் தம்மைக் காட்டிக் கொடுக்கத் தொடங்கியதால் பொறுப்பிலிருந்த புலிகள் அச்சமடைந்தன. சிலர் இராணுவத்திற்கு கப்பம் கொடுத்து காட்டுப் பாதைகளால் தப்பியோடினர். இடம்பெயர்ந்து வரும்போது மக்களோடு சேர்ந்து வந்த தளபதிகள் பெண்களும் ஆண்களுமாக இராணுவப் புலனாய்வாளர்களிடம் கப்பம் செலுத்தி ஓடியிருந்தனர். இவையும் மக்கள் மத்தியில் அவர்கள் மீது பெரும் அபகீர்த்தியை தோற்றுவித்தது. அவர்கள் நின்றிருந்தால் அதன் விளைவாக ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி மக்கள் கணக்கில் எடுக்கவில்லை. இதனால், பணம் படைத்தவர்கள் தப்பியோட ஏழைகளின் பிள்ளைகள் சிறையில் வாடுவதா என்ற கேள்வியை கேட்க வைத்தது.

(சாட்சியம் நீளும்)

# மதத்தின் பெயரால்... பகடை ஆடும் முஸ்லிம் அரசியல்!



மட்டுநேசன்


இலங்கை அரசியலில் காட்சிகள் வேகமாக மாறிவருகின்றன. ஒரு நியாயம் புரியும் முன்னர் அடுத்த காட்சி அரங்கேறி விடுகின்றது. அடுத்து நடக்கக்கூடிய ஏதாவது தேர்தல்கள் வரை இவை தொடரலாம்.

இரு முஸ்லிம் ஆளுநர்களையும் ஓர் அமைச்சரையும் பதவி விலகக் கோரி மிரட்டி பௌத்த பிக்கு ஒருவர் உண்ணாவிரதம் இருந்தார். அவர்களுக்கு பயங்கரவாதத்துடன் தொடர்பு இருப்பதாக அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். அவர்கள் இராஜினாமா செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டமை ஒரு ஜனநாயக விரோதப் போக்கு. உண்மையில், அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருக்கும்பட்சத்தில் அவை குறித்து உரிய முறைப்பாடு செய்யப்பட்டு, அவை விசாரிக்கப்பட்டு அவர்கள் பதவி விலக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு மாறாக எந்த விசாரணையும் இன்றி அவர்கள் பதவி விலகக் கோரப்பட்டனர். ஜனாதிபதியும், பிரதமரும் கைவிட்ட நிலையில் இரு ஆளுநர்களும் பதவி விலகினர். இது மிகப்பெரும் ஜனநாயக விரோதச் செயல்.

அதற்குப் பதிலாக ஆட்சியில் இருந்த அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் பதவி விலகுவதாக அறிவித்தனர். அது பாராட்டப்பட வேண்டியது - முன்னுதாரணமானது. அவர்களுக்கு தமிழ் கட்சிகளும் ஆதரவு தந்தனர் - அதுவும் பாராட்டத்தக்கது. பெரும்பான்மையினரின் மிரட்டலுக்கு முன்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு தமிழ் அரசியல்வாதிகள் தந்த ஆதரவு அது. இதற்கு முன்னதாக தமிழர்கள் சிக்கலில் இருந்தபோது முஸ்லிம் அரசியல்வாதிகள் இவ்வாறு ஆதரவு தந்ததாக அண்மையில் எனக்கு ஞாபகமில்லை.

அது நிற்க.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் பார்த்தாக வேண்டும். எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் குறித்த விடயம் அது. ஆனால், இது அவர்கள் மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டை சுமத்துவது பற்றியல்ல. அரசியல் அறம் குறித்த கேள்வி இது.



**ஹிஸ்புல்லா**

ஹிஸ்புல்லா அவர்களின் சர்ச்சைக்குரிய வீடியோ மற்றும் அவருக்கு எதிரான ஏனைய பல குற்றச்சாட்டுக்கள் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டபோது, அவர் ஆளுநராக நியமிக்கப்பட, தனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் ஒரு தரப்பு மக்களால் முன்வைக்கப்படும் இவை குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு அவர் விளக்கமளிக்க வேண்டும் என்று "அரங்கம்" பத்திரிகையில் கேட்டிருந்தோம். கிழக்கில் இருந்து வரும் ஒரே வாரப் பத்திரிகையான அரங்கத்தின் கேள்விகள் குறித்து அவர் செவிமடுக்கவில்லை. நாங்கள் அவர் மீது குற்றஞ்சாட்டவில்லை. மக்களின் குற்றச்சாட்டுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். ஆனால், அவர் அதற்கு பதிலளிக்கவில்லை.

ஆனால், சில வாரங்களுக்கு அல்லது மாதங்களுக்கு உள்ளாகவே அந்த விடயம் குறித்து விளக்கமளிக்க வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். அதுவும், பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்த நிலையில் அவை குறித்த குற்றச்சாட்டுக்களில் இருந்து தவிர்த்துக் கொள்ளுமுகமாக அவர் அதனை செய்தார். அதுவும் ஒரு வீடியோ மூலம். அது அவருக்கு ஒரு பலத்த பின்னடைவு. ஆனால், முன்னதாக ஆளுநரான தருணத்தில், நாம் கேட்டபோது அவர் அதனைச் செய்திருந்தால் கிழக்கு மக்களுக்கு அவர் கொடுத்த விளக்கமாக, கௌரவமாக அது பார்க்கப்பட்டிருக்கும். ஆனால், இப்போது அதனால் அவர் அவமானம் அடைந்திருக்கிறார். ஜனநாயகத்துக்குப் புறம்பாக மிரட்டப்பட்டுள்ளார். அவர் இவ்வாறு அரசியல் ரீதியாக மிரட்டப்பட்டதை நாம் ஆதரிக்கவில்லை. ஆனால், தான் நியாயமாகச் செய்ய வேண்டியதை உரியவேளையில் செய்யாததால் அவரே எதிர்பாராமல் அவர் இந்த நிலைக்கு தள்ளப்பட்டார். (ஆனால், அந்த வீடியோ மூலம் அவர் கொடுத்த விளக்கம் முழுமையானது அல்ல.)

**ரவூப் ஹக்கீம்**

அடுத்தது ரவூப் ஹக்கீம் அவர்கள் குறித்த விடயம். பயங்கரவாதத் தாக்குதலையடுத்து பெரிதாக விமர்சனங்களுக்கு உள்ளாகாதவர் அவர். சிங்களவர்களும் அவரை பெரிதும் விமர்சித்தது கிடையாது. ஆனால், கடந்த காலங்களில் நடந்த சில விடயங்களை இங்கு நாம் மீட்டிப் பார்க்க வேண்டியுள்ளது.



இலங்கையின் இறுதிப் போரின்போது ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விவாதங்களில் இலங்கை அரசின் சார்பில் கலந்துகொண்டு இலங்கை தரப்புக்காக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விவாதித்தவர் இவர். இலங்கையில் இறுதிப்போரில் மனித உரிமைகள் மீறப்படவில்லை என்று வாதிட்டவர். அது குறித்து ஒரு தொலைக்காட்சிச் செவ்வியில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் தான் இலங்கையின் நீதி அமைச்சராகவே அங்கு செயற்பட்டதாகவும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் செயற்படவில்லை என்று பதிலளித்தார். அவருக்கு உண்மையில் நியாய மற்றவற்றை விவாதிக்கும்போது தன்னை மறைக்கத் தெரியாது. அவர் வாதமே மிகவும் பலவீனமாக இருந்தது. அவரது முகமே அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

ஜெனிவாவில் தமிழ் மக்கள் தமது மனித உரிமைகள், இலங்கை இறுதிப்போரில் நிராகரிக்கப்பட்டதாக குரலெழுப்பிய இடத்தில் அதனை எதிர்த்து வாதிடச் சென்ற அவர், இப்போது, தனது இனம் ஜனநாயக மீறல்களை எதிர்கொள்கிறது,

(மறுபக்கம் பார்க்க)

துன்புறுத்தப்படுகின்றது, தாக்கப்பட்டது என்று கூறி பதவி விலகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். சட்டப்படி அன்று அவர் தொலைக்காட்சியில் வாதிட்டபோதும், பின்னர் பதவி விலகுவதாக செய்தியாளர் சந்திப்பில் பேசிய போதும் சிறப்பாகச் செயற்படத்தான் முயன்றார். ஆனால், அவரது அரசியலின் அறம் அங்கு பிறழ்ந்து விட்டது. இது அவரது அரசியல் வாழ்வில் ஓர் இழுக்கு. அதனை அவர் சரி செய்தாக வேண்டும். தனது இனத்தைச் சேர்ந்த மூன்று சக அரசியல்வாதிகளுக்காக பதவி விலகியதன் மூலம் அவர் எந்த அளவுக்கு மேன்மையானவராகப் பார்க்கப்பட்டாரோ, அந்த அளவுக்கு அவர் அரசியல் நியாயம் தளர்ந்தவராகவும் இனி பார்க்கப்படுவார்.

இவ்வாறு கிழக்கில் இருந்து வெளியாகும் அரங்கம் வார இதழின் ஆசிரியர் பூபாலரட்ணம் சீவகன் தெரிவித்துள்ளார். 'யாரும் சரியில்லை! நியாயம் புரிபடும் காலம் இது", என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியே இது.

இன்று முஸ்லிம்கள் மீண்டும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்க வேண்டும் என மகாநாயக்கர்கள் குறிப்பிட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. சிறுபான்மை இனத்தவர் தொடர்பாக இதுவரையில் மகாநாயக்கர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களுக்கு மாறாக இவை இருப்பது வரவேற்கத்தக்கது. அமைச்சரவை மறுசீரமைப்பின்போது ரவூப் ஹக்கீம் நீதியமைச்சைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டால் அவர் என்ன செய்வார்? உயிர்த்த ஞாயிறு சம்பவங்களுக்குப் பின்னர் நடந்த விடயங்களில் அவரது வார்த்தைகளில் கூறுவதனால் நீதியமைச்சராக நடந்து கொள்வாரா? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக நடந்து கொள்வாரா? நீதியமைச்சராக நடந்து கொண்டால் அவரது அரசியல் வாழ்வு முடிவுக்கு வந்துவிடலாம். தமிழர் இனவழிப்பு விடயத்தில் மனச்சாட்சியுடன் நடந்துகொள்ளாதது போலவே, இதுபோன்ற இன்னும் எவ்வளவு அழிவுக்குப் பின் உண்மையை அவர் ஏற்றுக்கொள்ளப் போகிறார்?

கடந்த மாகாண சபைத் தேர்தலில் மஹிந்தவுடன் இணைந்து தேர்தலைச் சந்திக்கவில்லை இவர். முஸ்லிம் ஒருவரை முதல்வராக்குகிறோம் எனக் கூட்டமைப்புக் கேட்டபோதும் அந்த வேண்டுகோளை உதறித் தள்ளிவிட்டு மஹிந்தவுடன் இணைந்தவர். மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்றவுடன் அவரைக் கைவிட இவர் தயங்கவில்லை. தமிழத் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சியமைக்ச் சம்மதித்தார். எப்போதும் சக சிறுபான்மையினரின் வேண்டுகோளை விட அதிகாரத்தில் இருப்பவரின் நட்பையே விரும்புபவர் இவர். தனது தேவைக்காக யாரையும் கழற்றி விடத் தயாரான தலைவராகவே இப்போதும் காணப்படுகிறார்.

2006 மார்ச் 30 இல் நடந்த உள்ளூராட்சி தேர்தலில் திருமலை நகர சபைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது. இதனை எதிர்த்து ஐ.தே.க. மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி சுயேச்சையாக போட்டியிட்டன. இக்குழுவில் மு.கா.வும் இணைந்து கொண்டது. எப்போதுமே சிங்களவர் பக்கமே முஸ்லிம் காங்கிரஸ் இருந்தது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம். பரிதாபம் என்னவெனில் சிங்களக் கட்சிகளின் சார்பில் ஒவ்வொருவரும் கூட்டமைப்பின் சார்பில் ஒருவருமே முஸ்லிம்கள் தெரிவாக முடிந்தது.

2002 - 2006 சமாதானப் பேச்சுக் காலத்தில் வெளிநாட்டுக்கு அரசுத் தரப்பில் சென்ற முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் புலிகளிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். நாங்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் உங்கள் தரப்பில் எங்களது பிரதிநிதி ஒருவர் இருக்க வேண்டும்", எனக் குறிப்பிட்டார். அதற்குப் புலிகள், 'அது பிரச்சினை இல்லை. இரு தரப்பில் நீங்களே பேசிக்கொள்ளுங்கள். நாங்கள் போகிறோம்", எனப் பதிலளித்தனர்.

**அடுத்தது ஹிஸ்புல்லா!**

முஸ்லிம்களை ஆயுதபாணிகளாக்கிய தனது சாதனை பற்றி இவர் தெரிவிக்கும் கருத்துக்கள் காணொலிகளாக வெளிவந்தன. பின்னர் ஜிகாத் போன்ற அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைப்பதாக வெளிவந்த காணொலிகளிலும் இது தொடர்பான ஏற்பாட்டாளராக இவரே காணப்படுகின்றார். சட்டபூர்வமற்ற இந்த ஆயுதங்கள் எங்கிருந்து வந்தன என்பது பற்றி அரசுத் தரப்பும் கவலைப்படவில்லை. தமிழருக்கு எதிராக இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படும்வரை எல்லாம் சுபமே!

வவுணதீவில் இரு பொலிஸார் வெட்டியும் சுட்டும் கொல்லப் பட்ட சம்பவம் பற்றி சிலவேளை முன்னர் இவருக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். எனினும் இச்சம்பவம் தொடர்பாக முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக கொடுப்புக்குள் சிரித்தோரில் இவரும் அரசிடம் ஊதியம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் 27 பேரும் அடங்கமாட்டார்கள் என எவராவது நம்புவார்களா? ஞானசார தேரரின் விடுதலை இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்றார் இவர். வவுணதீவு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டோரின் குடும்பங்கள் என்ன பாடுபட்டிருக்கும் என இவரது மனச்சாட்சி உறுத்த வில்லையா? 200 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரகுபதி சர்மா தொடர்பாக மௌனமாக இருந்தமை. தமிழர் விரோதப் போக்கை வெளிப்படுத்துகிறது அல்லவா?

இன்று இலங்கையில் நாம் சிறுபான்மையினர். எனினும் உலகில் நாமே பெரும்பான்மை யினர். எனவே எம்மை எவரும் இலகுவில் அடக்கிவிட முடி யாது என்ற இவரது வீறாப்பு வேறு. இன்னமும் அரேபிய முஸ்லிமாகவே தன்னை வெளிப் படுத்த முனைகிறார். உலகில் தாம் பெரும்பான்மை என்பதற்காகவா மன்னாரில் 508 ஏக்கர் காணி, வாகரையில் கடற்புலிகள் பயன்படுத்திய காணி என வட,கிழக்கில் பெரும்பான்மை காணி வாங்கிய அரசியல்வாதியாக விளங்க முனைகிறார் இவர்? தமிழருக்கு இந்நடவடிக்கை அச்சமூட்டுவது இயல்புதான்.

இலங்கையில் உள்ள பௌத்த பிக்குகள் பாளி மொழி கற்கிறார்கள். கத்தோலிக்க மத குருமார் இலத்தீன் கற்கின்றனர். இந்து மத குருமார் சமஸ்கிருதம் கற்கின்றனர். இவை குறிப்பிட்ட தேவைக்காகவே. அந்தந்த மதத் தலங்களுக்கு அப்பால் இம்மொழிகள் பயன்படுத்தப்படுவதில்லை. நாட்டில் அரச கரும மொழிகளாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் மட்டுமே அறிவிக் கப்பட்டுள்ளன. காத்தான்குடியில் மட்டும்தான் அரசமைப்பு விதிகளுக்கு மாறாக அரபுமொழியிலும் வீதிப் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டன. அரபுமொழி பள்ளிவாசலில் பயன்படுத்தப்படு வதை எவரும் ஆட்சேபிக்க வில்லை. அது அவர்களின் மத உரிமை. 'மத்தியில் கூட்டாட்சி: மாநிலத்தில் சுயாட்சி", என அறிவித்த ஒரு கட்சி தீவகத்தில் தனி ஆட்சி என்பதையும் சில காலம் அமுல்படுத்தியது. கிட்டத்தட்ட அதேபாணிதான் அரபு மொழியில் பெயர்ப் பலகை வைப்பதும்.

ஒரு முஸ்லிமே இலங்கையின் தமிழ் நாவலை எழுதினார். 1885 இல் முஹமது காசிம் சித்திலெப்பையால் எழுதப்பட்ட இந்நாவலின் பெயர் அசன்பே சரித்திரம். பேராசிரியர் நுஃமான் இதனை தற்போது மறுபதிப்பு செய்துள்ளார். அற்புதமான கவிஞர்கள், எழுத்தாளர்கள், வானொலி அறிவிப்பாளர்கள் தமிழிலேயே தம்மை இனங்காட்டினர். மொ.அ.ம.மொ.சுல்தான் தங்களது மாநகர பிதாவாக (05.01.1955 - 31.12.1955) யாழ்ப்பாண மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர் என்ற உண்மையை ஹிஸ்புல்லாவோ, ஹக்கீமோ அடுத்த தலைமுறை முஸ்லிம்களுக்கு நிச்சயம் சொல்லியிருக்க மாட்டார்கள். இலங்கையின் மூலைமுடுக்குகளில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் மொழியிலேயே மாணவர்கள் பயின்று வருகின்றனர். மதத்தின் பெயரால் முஸ்லிம்களை தமிழரின் விரோதிகளாக்கி, சிங்களவரிடம் கோத்துவிடும் வேலையைத்தான் ஜிகாத், முஸ்லிம் ஊர்காவல் படைகள் மூலம் இதுவரை ஹிஸ்புல்லா செய்துவந்தார்.

சாதாரணமாக இலங்கை முஸ்லிம்கள் ஏனைய இனத்தவர்களுடன் சமாதான, சகவாழ்வையே மேற்கொண்டனர். குறிப்பாக வியாபாரம், விவசாயம் என்பனவற்றில் தமிழருடன் அவர்களுக்கு இருந்த உறவு ஆழமானது. இன்றைய நிலை கவலையளிப்பதாக உள்ளது. முஸ்லிம் ஒருவர் சமைத்தார் என்பதற்காக ஒரு வைபவத்தில் கலந்து கொண்ட சிங்களவர்கள் உணவைப் புறக்கணித்தனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது முஸ்லிம் நிறுவனங்களுக்கு வாடிக்கையாளர் செல்வதில் பாரிய வீழ்ச்சி காணப்படுகின்றது. போட்டித் தொழில்களில் முஸ்லிம்கள் ஆர்வமுடன் ஈடுபட முடியாமல் இருக்கிறார்கள். சோதனைச் சாவடிகளிலும் இவர்கள் வித்தியாசமாக நடத்தப்படுகிறார்கள். இந்த நிலைமைக்கு சஹ்ரான் மட்டுமல்ல ஹிஸ்புல்லா போன்றவர்களும் முக்கிய காரணம். தமிழகம் போல மொழியுணர்வுக்கும், மனிதநேயத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கும் நிலை மீண்டும் தோன்ற வேண்டும். மதத்தின் பெயரால் வேறுபாடுகளை ஏற்படுத்தும் அரசியல்வாதிகளை நிராகரிக்கும் துணிவு முஸ்லிம்களிடம் ஏற்பட வேண்டும்.




# தேடும் கண்கள்



**கழுகு** படம் :
இடம் : முல்லைத்தீவு ம.சாந்தமேனன்



**செம்மார்புக் குக்குறுவான்**
இடம் : முள்ளியவளை படம் :



## சாம்பல் நாரை

ஆங்கிலம் : Grey Heron
உயிரியல் : Ardea cinerea

சாம்பல் நாரை நீருக்கு அருகாமையில் வாழும் ஒரு பறவையினம். நாரை இனங்களில் ஒரு வகை. மிகவும் உயரமாகவும் - ஒல்லியாகவும் வளைந்த கழுத்து - நீண்ட கால்களைக் கொண்டது.


அதன் நிறத்தை அடிப்படையாகக் கொண்டு, சாம்பல் நாரை என அழைக்கப்பட்டாலும் நதியன், நாராயணப் பட்சி, நரையன், கொய்யடி நாரை, கருநாரை என இலங்கையிலும், தமிழகத்திலும் இதற்கு வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பறவை அதிகபட்சம் 100 செ.மீற்றர் உயரம் வளரக்கூடியது. இறக்கைகள் 155- 195 செ.மீற்றர் அளவுக்கு விரிவடையக்கூடியன. இதன் உடலில் சாம்பல் நிறமே அதிகம் காணப்பட்டாலும், இறக்கையின் அடிப்பகுதியில் கறுப்பும், தலையும் - சிறு கொண்டையும் வெள்ளை நிறத்திலுள்ளன. அலகுகள் மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பு நிறம் கொண்டவை.

இதன் சிறப்பு பறக்கும்போது கழுத்தை ஆங்கில எழுத்தான 'எஸ்" வடிவத்தில் வைத்திருக்கும். பல மணித்தியாலங்கள் நீரில் அசைவின்றி நின்று மீன், தவளை, தேரை, விலாங்கு மீன் போன்றவற்றை வேட்டையாடும். பாம்பு, பல்லி, சிறு பாலூட்டிகளையும் உணவாக்கிக் கொள்ளும்.




**சிறுத்தை** படம் : நவீன் சம்பத்
இடம் : வைல்ட் ஸ்ரீலங்கா




**மீன்கொத்தி** படம் :
வைல்ட் ஸ்ரீலங்கா சி.சந்திரசேகரன்



**சிறுத்தை** படம் : சோபன் ராஜ்
இடம் : வைல்ட் ஸ்ரீலங்கா



**காட்டெருமை**
வைல்ட் ஸ்ரீலங்கா படம் : சாரக ஜெயரத்ன

# வாரபலன்

### மேடம்
கவனமாக இருக்க வேண்டிய காலமிது. நிதானத்துடனும் பொறுமையுடனும் செயலாற்றி வெற்றி பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் சுமுகமாக முடிவடையும்.

### துலாம்
சிறிய முயற்சிகள் பெரிய வருமானத்தைக் கொண்டு வந்து சேர்க்கும். இனிய செய்திகள் உங்களைத் தேடிவரும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். வியாபாரிகளுக்கு மனதில் குழப்பங்கள் சூழும்.

### ரிஷபம்
பொருளாதாரத்தில் அபிவிருத்தி உண்டாகும். குடும்பத்தில் மகிர்ச்சி தாண்டவமாடும். உற்றார் உறவினர்களிடம் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். உத்தியோகஸ்தர்கள் தடைப்பட்டிருந்த காரியங்கள் அனைத்திலும் வெற்றிவாகை சூடுவீர்கள்.

### விருச்சிகம்
பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். செயல்களில் திறமை வெளிப்படும், எதிரிகளின் பலம் குறையும். பெயரும் புகழும் உயரும். குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும்.உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு விரும்பிய இடமாற்றமும் கிடைக்கும்.

### மிதுனம்
குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். உடல் ஆரோக்கி யம் பலப்படும். நம்பிக்கையுடன் செயல்களைச் செய்து முடிப்பீர்கள்.உத்தியோகஸ்தர்களுக்கு கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரிகள் புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடவும்.

### தனுசு
பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அனைத்து செயல்களிலும் உங்கள் தனித்தன்மை வெளிப்படும். உத்தியோகஸ்தர்களின் ஆற்றல் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமை தென்படும்.

### கடகம்
செயல்கள் அனைத்தும் நேர்த்தியாக முடியும். சுபச் செலவுகளைச் செய்து மகிழ்வீர்கள். தாயாரின் உடல்நிலையை கவனிக்கவும். மருத்துவச் செலவுகளும் செய்ய நேரிடலாம். வியாபாரிகளுக்கு கடன் சுமை குறையும்.

### மகரம்
குடும்பத்தில் சுப காரியங்களை நடத்துவீர்கள். மதிப்பு மரியாதைகள் உயரும். பெண்களுக்கு காரணமில்லாமல் மனதில் அமைதி குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் நன்றாக இருக்கும்.

### சிம்மம்
குடும்பத்தில் நிம்மதி பூத்துக் குலுங்கும். பொருளாதாரத்தில் சீரிய முன்னேற்றம் தென்படும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளில் கவனம் செலுத்தவும். வியாபாரிகள் வர வேண்டிய பணம் சம்பந்தமாக அக்கறை காட்டவும்.

### கும்பம்
பொருளாதாரத்தில் இருந்து வந்த சிரமங்கள் குறையும். பழைய கடன்கள் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். கடமை தவறாமல் உழைக்கவும். வியாபாரிகள் தங்கள் நண்பர்களை விட்டுப் பிரிய நேரிடும். விவசாயிகளுக்கு லாபம் குறையும்.

### கன்னி
துணிவோடும் தன்னம்பிக்கையோடும் திட்டமிட்ட காரியங்களில் ஈடுபடுவீர்கள். முக்கியஸ்தர்களின் உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு அனைத்து வேலைகளையும் திறம்பட செய்துமுடிக்கும் ஆற்றல் உண்டாகும்.

### மீனம்
குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செயல்களை தெளிவுடன் சிந்தித்துச் செய்து முடிப்பீர்கள். பணவரவு சீராக இருக்கும். செலவுகளும் கூடும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு கூடும். பயணங்களால் அனுகூலம் ஏற்படும். வியாபாரிகள் கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாகப் பழகவும்.


பேசாலை வைத்தியசாலையில் சுகாதார வலுவூட்டல் திட்ட ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு எதிராக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அண்மையில் ஒரு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.



மட்டக்களப்பு மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையிலும், கல்லாறு வைத்தியசாலையிலும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் முறைமை வலுவூட்டும் திட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டுள்ளது.


முல்லைத்தீவு மாவட்டம் செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயிலின் வரலாறு உறுதிப்படுத்தப்படுமாயின் அதன் கட்டுமானப் பணியும் இருப்பும் உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு.


தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாதிரிக் கிராம வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமையாளர் தலைமையில் மன்னாரில் நடைபெற்றது.


மட்டக்களப்பு உன்னிச்சைக் கிராம மக்கள் தமது விவசாயப் பயிர்களை யானைகளிடமிருந்து பாதுகாக்க நிரந்தர வேலி ஒன்றை அமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்

# சிறியதவறும் பெரிய தண்டனையும்!



(சென்ற வாரத் தொடர்ச்சி)

"உன்னை யார் நெய் உண்ணச் சொன்னார்கள்?" என்று அக்பர் கேட்க, அலி மகேஷின் பெயரைக் கூறினான். உடனே மகேஷ் அங்கு அழைத்து வரப்பட்டான். அவனைப் பார்த்ததும், "பீர்பல்! உன் வேலைதானா இது? அவனை ஏன் நெய் சாப்பிடச் சொன்னாய்?" என்று அக்பர் கேட்டார்.

"பிரபு! அலியிடம் நடந்தைக் கேட்ட பிறகு நீங்கள் அவனை சுண்ணாம்பை விழுங்க வைக்கப் போகிறீர்கள் என்று தெரிந்து கொண்டேன். நெய் தின்ற பிறகு சுண்ணாம்பை விழுங்கினால் உடலுக்குத் தீங்கு ஏற்படாது என்று எனக்குத் தெரியும்! அதனால்தான் அவ்வாறு அவனை செய்யச் சொன்னேன்" என்றான் பீர்பல்.

"அவன் மீது உனக்கு என்ன அவ்வளவு அக்கறை?" என்று அக்பர் கேட்க, "அக்கறை அவன் மீதில்லை, உங்கள் மீதுதான் பிரபு. அவன் தயாரிக்கும் பீடாவை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஏதோ தெரியாமல் அவன் ஒருநாள் செய்த தவறுக்காக அத்தனை பெரிய தண்டனையை அவன் பெறப் போவதைத் தவிர்க்க விரும்பினேன். நீங்கள் அவன் செய்த சிறிய தவறை மன்னித்து விட வேண்டும். அக்பர் சக்கரவர்த்தி மிகவும் இரக்க குணம் படைத்தவர் என்பதை நிரூபிக்க இதை விட உங்களுக்கு வாய்ப்பு கிடைக்குமா?" என்று கேட்டான் பீர்பல்.

அவனுடைய சாமர்த்தியமான பேச்சினால் கவரப்பட்ட அக்பர், "நீ சொல்வது சரிதான். மூன்று ஆண்டுகளாக அருமையாக பீடா தயாரித்தவன் ஒருநாள் தெரியாமல் செய்த தவறுக்காக தண்டனை பெறுவது சரியல்ல. அவனை நான் மன்னித்து விடுகிறேன்" என்றவர் அலியைப் பார்த்து, "பிழைத்துப் போ" என்றார்.

(முற்றும்)




## உங்களுக்கு தெரியுமா? யுனெஸ்கோ

ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனங்களில் ஒன்றான யுனெஸ்கோ நிறுவனம் 1945 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ம் திகதி உருவாக்கப்பட்டது. அதன் உறுப்பு நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாடு மற்றும் தொடர்பாடல் துறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே யுனஸ்கோ நிறுவனத்தின் பிரதான பணியாகும். கல்வி, இயற்கை அறிவியல், சமூக மற்றும் மனித அறிவியல், பண்பாடு, செய்தி தொடர்பு போன்ற 5 விடயங்கள் மூலம் யுனெஸ்கோ அமைப்பின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. யுனெஸ்கோ அமைப்பு 193 உறுப்பு நாடுகளையும் 7 பங்கு பற்று உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இதன் தலைமையகம் பாரிஸ் நகரில் உள்ளது.



## கேள்வி நேரம்

1. கர்ணனுடன் தொடர்புடைய ஆபரணம் எது ?
2. வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிரி எது ?
3. உப்புத் தண்ணீரில் வளரும் மரம் எது ?
4. பிறந்தது முதல் இறப்பது வரை தூங்காத பிராணி எது ?
5. பிரேசில் நாட்டின் நாணயம் எது ?

**விடைகள்**

1.கவச குண்டலம் 2. ஈசல்
3. மாங்குரோவ் 4.எறும்பு
5. பிரேசில் ரியல்

## இனிய தமிழ்




### ஆறு பெரும் பொழுதுகள்

| | |
|---|---|
| இளவேனில் | சித்திரை - வைகாசி |
| முதுவேனில் | ஆனி - ஆடி |
| கார் | ஆவணி - புரட்டாதி |
| கூதிர் | ஐப்பசி - கார்த்திகை |
| முன்பனி | மார்கழி - தை |
| பின்பனி | மாசி - பங்குனி |

## ஆங்கிலம் கற்போம்




have, have got

உரிமைகள் உடமைகள் பற்றியோ, உறவு, நட்பு குறித்துப் பேசும் போதோ, நோய்கள் தொடர்பாகப் பேசும் போதோ, சிறப்பியல்புகளைப் பற்றி குறிப்பிடும் போதோ "have" அல்லது "have got" எனும் இரண்டில் எதைவேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இரண்டும் ஒரே அர்த்தத்தை குறிக்கும் நிகழ்காலச் சொற்களாகும்.

கவனிக்கவும்:

இந்த have, have got எனும் இரண்டு நிகழ்காலச் சொற்களையும் கேள்வி பதிலாக மாற்றும் போது எவ்வாறான வாக்கியங்களாக அமைகின்றன என்பதனை கீழே கவனியுங்கள்.

Do you have cold?
Have you got cold?

Yes, I have cold.
Yes, I have got cold.

Do you have a house in the country?
Have you got a house in the country?
Yes, I have a house in the country.
Yes, I have got a house in the country.

Do you have any brothers or sisters?
Have you got any brothers or sisters?
No, I don't have any brothers or sisters.
No, I haven't got any brothers or sisters.

## அட அப்படியா?

- மிக மெதுவாக இயங்கும் பாலூட்டி தேவாங்கு
- மிகத் தடிப்பான சருமம் கொண்ட விலங்கு திமிங்கலம்
- உலகில் முதல் தோன்றிய உயிரினம் அமீபா
- புலிகள் அதிகமாகக் காணப்படும் கண்டம் ஆசியா
- கங்காரு குட்டி பிறந்தவுடன் நீளம் 25செ.மீ






## அறியாத சில பழமொழிகள்




1. இராசா மகளானாலும் கொண்டவனுக்கு பெண்டுதான்.
2. இறுகினால் களி , இளகினால் கூழ்.
3. இஞ்சி இலாபம் மஞ்சளில்.
4. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
5. இராகு திசையில் வாழ்ந்தவனும் இல்லை இராச திசையில் கெட்டவனுமில்லை




# காதுக்குள் பூச்சி எப்படி வெளியேற்றுவது?

யானை மிகப்பெரிய விலங்காக இருந்தாலும், அதன் காதுக்குள் சிறிய எறும்பு நுழைந்தால், அதோகதிதான். யானையின் நிலைமையே இப்படியென்றால், நாமெல்லாம் எம்மாத்திரம்... துடிதுடித்துப் போய்விடுவோம். காதுக்குள் பூச்சி புகுந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்...?

காதுக்குள் பூச்சியோ, எறும்போ நுழைந்துவிட்டால், காது நிறைய எண்ணெய் அல்லது உப்புக் கரைசலை ஊற்றிப் பார்க்கலாம் அதனால், பூச்சியின் மூச்சு தடைப்பட்டு உடனடியாக இறந்துவிடும். அதை எளிதாக வெளியே எடுத்துவிடலாம். இது, எறும்பு மற்றும் சிறு பூச்சிகளுக்கு மட்டுமே பலனளிக்கும். பெரிய பூச்சிகள், வண்டுகள், உண்ணிகளை வெளியேற்ற உதவாது.

பெரிய பூச்சிகள் காதுக்குள் நுழைந்துவிட்டால், அவை காதிலுள்ள ஜவ்வுகளைப் பிடித்துக்கொண்டு உள்ளேயே தங்கிவிடும். சுய மருத்துவம் செய்யாமல் உடனடியாக காது, மூக்கு தொண்டை மருத்துவரைப் பார்ப்பது நல்லது. எண்டஸ்கோப்பி சிகிச்சை மூலம் பூச்சியை வெளியே எடுத்துவிடலாம்.

குழந்தைகளின் காதுக்குள் பூச்சி நுழைந்தால், மயக்க மருந்து கொடுத்து எடுக்க வேண்டியிருக்கும். பட்ஸ் அல்லது வேறு ஏதேனும் ஒன்றைக் காதில் நுழைத்து, பூச்சியை எடுக்க முயலும்போது உள்காதிலுள்ள மென்மையான பகுதிகள் பாதிக்கப்படலாம், காதில் காயம் ஏற்படலாம்.

# உணவுக்கு முன் இனிப்பு

உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்றால், இனிப்பு உணவுகளைச் சாப்பிடக் கூடாது என்பது தெரியும். ஆனால் பாயசம், கேக், ஐஸ்கிரீம், ஆகியவற்றை விரும்பிச் சாப்பிடுகிறோம். 'இவற்றைச் சாப்பிடாமலிருக்க முடியாவிட்டால், ஒரு சிறு மாற்றத்தைச் செய்து பாருங்கள்' என்கிறது சமீபத்திய ஆய்வு.

உணவுக்குப் பின்னர் இனிப்பு சாப்பிடாமல், முன்னரே சாப்பிட்டு விடுங்கள். இது ஒரு வகை மனித உளவியல். ஆரம்பத்திலேயே இனிப்பு சாப்பிட்ட ஒருவர், பிறகு ஆரோக்கியமான உணவுகளைத் தெரிந்து சாப்பிடுவாராம். அதாவது, அவரது மனம் இனிப்பால் ஏற்கெனவே உடலில் சேர்ந்துவிட்ட கலோரிகளை எண்ணிப் பார்த்து, மற்ற உணவுகளைச் சரியாகத் தெரிந்து எடுக்கிறது.

**மருத்துவரின் செய்தி**

இதைப் பரிசோதிக்க, ஒரு கல்லூரி உணவகத்தில் எல்லோருக்கும் ஒரு கேக் அல்லது ஒரு பழம் பரிமாறப்பட்டது. பிறகு, யார் எவ்வளவு உணவை உட்கொள்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டது. முதலில் கேக் சாப்பிட்டவர்கள், பழம் சாப்பிட்டவர்களைவிட 30 சதவிகிதம் குறைவான கலோரிகளையே உட்கொண்டார்களாம்.

இனிப்பு சாப்பிடாமலிருந்தால் இன்னும் நல்லது, அது வேறு விஷயம்!



# உணவே மருந்து

## எள் துவையல்



'இளைத்தவனுக்கு எள்ளைக் கொடு' என்பது பழமொழி. எலும்பு வலிமை தேவைப்படும் அனைவருக்குமே எள்ளைப் பரிந்துரைக்கலாம். மூட்டுத் தேய்மானத்தை தடுப்பதற்கும், எலும்புகள் ஒன்றோடு ஒன்று உரசிக்கொள்ளாமல் இருப்பதற்கும், நரம்புகளின் செயல்பாடுகளைச் சீராக்குவதற்கும் உடலில் எண்ணெய்ச்சத்து அவசியம். எண்ணெய் வித்தின் தாவர வகையைச் சேர்ந்த எள், இதற்கு உதவிபுரியும். இன்று வழக்கத்திலிருக்கும் நல்லெண்ணெயின் அடிப்படையே எள்தான். இது, ஒருகாலத்தில் அஞ்சறைப் பெட்டியில் தவறாமல் இடம்பிடித்திருந்தது. இன்றோ, பலரும் உடல் உஷ்ணத்தைக் காரணம் காட்டி, அன்றாட உணவில் அதைத் தவிர்க்கிறார்கள். அப்படியானவர்கள்கூட, எள் துவையலைத் தட்டிக்கழிக்க முடியாது!

பலன்கள்: பெண்களுக்கு உடலில் ஈஸ்ட்ரோஜென் குறைந்தால், ரத்தத்தில் கொழுப்புச்சத்து அதிகரிக்கும். இதன் காரணமாக மாதவிடாயில் பல சிக்கல்கள் ஏற்படும். இது, ஈரல் பாதிப்புகள், இதயக் கோளாறு, ஹார்மோன் சமச்சீரின்மை எனப் பல பிரச்னைகளை உருவாக்கும். எனவே, மாதவிடாய் பிரச்னையுள்ள பெண்கள், முதல் நிலையிலேயே இது போன்ற உணவுகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் சமச்சீரின்மை பிரச்சினை உள்ளவர்கள், மெனோபாஸ் கடந்தவர்கள் அனைவருக்கும்கூட இந்த உணவு உதவும். எள் சாப்பிடுவதால், மாதவிடாயின்போது இரத்த வெளியேற்றம் அதிகமாகுமோ என்ற பயம் சிலருக்கு இருக்கும். துவையலில் சேர்க்கப்பட்டிருக்கும் தேங்காயும் உளுத்தம்பருப்பும் எள்ளின் உஷ்ணத் தன்மையைக் குறைக்கும் என்பதால், அந்த பயம் அவசியமில்லை. வயிற்றுப்புண், புளித்த ஏப்பப் பிரச்னை உள்ளவர்கள் ஏதேனும் ஒரு கஞ்சி வகையோடு எள் துவையலைச் சேர்த்துக்கொண்டால், அதுவும் சரியாகும். எலும்பு மூட்டுப் பிரச்னைகளைத் தடுப்பதற்கும், எலும்பை வலுவாக்குவதற்கும் உதவும் என்பதால், அனைவருமே எள் துவையலை உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

தேவையானவை:

கறுப்பு எள் : கால் கப்
தேங்காய் துண்டுகள் : 4
செத்தல் மிளகாய் : 4
கட்டிப் பெருங்காயம் : சிறு துண்டு
உளுத்தம்பருப்பு : ஒரு மே.கரண்டி
எண்ணெய் : ஒரு மே.கரண்டி
உப்பு : தேவையான அளவு
தண்ணீர் : சிறிது
புளி : சிறிதளவு

செய்முறை: எள்ளைச் சுத்தம் செய்து, வெறும் வாணலியில் வறுத்துக்கொள்ளவும். வாணலியில் எண்ணெய்விட்டுச் சூடாக்கி, அதில் உளுத்தம்பருப்பு, பெருங்காயம், செத்தல் மிளகாய் போட்டு சிறிது நேரம் வறுக்கவும். உளுத்தம்பருப்பு சிவந்ததும் தேங்காய் துண்டுகள், புளி, உப்பு சேர்த்து வதக்கவும். பிறகு அடுப்பிலிருந்து இறக்கி ஆறவிடவும். ஆறியதும், எள் மற்றும் தண்ணீர் (சிறிதளவு) சேர்த்துக் கெட்டியாக அரைத்தெடுத்தால், எள் துவையல் தயார்.

# காட்டு காத மன்

கறுப்போ, சிவப்போ எப்படிப் பிறந்தாலும் இயற்கை இருவருக்கும் பல சாதக, பாதகங்களை உருவாக்கியே வைத்திருக்கும். பலவீனங்களை எப்படி பலமாக மாற்றுகிறோம் என்பதில்தான் உயிர்பிழைப்புக் கதைகளே தொடங்குகின்றன.

ஓநாய்களில் கறுப்பாகப் பிறப்பதில் பிரச்சினையில்லை. கறுப்பாக வாழ்வதில்தான் பிரச்சினையே. சிவப்பு புரட்சியின் அடையாளம், கறுப்பு கிளர்ச்சியின் அடையாளம். இது ஒரு கறுப்பு ஓநாயின் உயிர் பிழைப்புக் கதை.

2000 ஆம் ஆண்டு பனிப் பிரதேசமான அமெரிக்காவின் யெல்லோஸ்டோன் தேசிய பூங்காவில் எண்களை அடையாளமாகக் கொண்ட பல வெள்ளை ஓநாய்கள் கூட்டமாக வசிக்கின்றன. அதில் 40 என்கிற எண்ணை அடையாளமாகக் கொண்ட ஒரு கூட்டமும் வசிக்கிறது. ஓநாய்கள் கூட்டத்திற்கு பெண்ணே தலைமை தாங்குகிறது. அதனுடைய வழிநடத்தலில்தான் எல்லாமே நடக்கும்.

கூட்டத்தில் இருக்கிற ஒரு வெள்ளை ஓநாய்க்கு நான்கு குட்டிகள் பிறக்கின்றன. அதில் கடைசிக் குட்டி கறுப்பாகப் பிறக்கிறது. கூட்டத்தின் முந்தைய வரலாற்றின்படி இதுவே முதல் கறுப்பு ஓநாய். மூன்று வெள்ளைக் குட்டிகளுக்குக் கிடைக்கிற எந்தச் சலுகையும் கறுப்புக் குட்டிக்கு மறுக்கப்படுகிறது. உதாசீனமும், புறக்கணிப்பும் கறுப்பு ஓநாயை இப்போதைக்கு வேண்டுமானால் தனிமைப்படுத்தலாம். ஆனால், தனித்து இருக்கிற கறுப்பு ஓநாய் தன்னை இங்கிருந்துதான் பலப்படுத்த தயாராகிறது.

வயதில் மூத்த ஆண் ஓநாய், கூட்டத்தில் இருக்கிற குட்டிகளுக்கு உணவு கொண்டு வந்து கொடுக்கிற வேலையைச் செய்கிறது. குட்டிகள் தங்களுக்குள் சண்டை இடுகின்றன. அதில் கறுப்புக் குட்டியே அதிகமான தாக்குதலுக்கு உள்ளாகிறது. ஓநாய்கள் தங்களது எல்லையை விரிவாக்குவதில் கவனமாக இருக்கும்.

ஓநாய்கள் உயிர்பிழைப்பு விஷயத்தில் தங்களின் எல்லையைப் பாதுகாத்துக் கொண்டே இருக்கும். திடீரெனப் பத்திற்கும் மேற்பட்ட ஓநாய் கூட்டம் அவற்றின் எல்லையை விரிவாக்க, 40 ஆம் எண் கொண்ட கூட்டத்தின் எல்லைக்குள் வந்துவிடுகின்றன. எண்ணிக்கையிலும், பலத்திலும் குறைந்த 40 ஆம் எண் கொண்ட கூட்டத்தால் அவற்றைச் சமாளிக்க முடியாது.

ஓநாய்கள் படையெடுப்பதில் சமரசமில்லாத ஒரு கொள்கையை கடைப்பிடிக்கும். அதாவது ஒரு கூட்டத்தை தாக்குவதற்கு முன் அந்தக் கூட்டத்தின் தலைவனை முதலில் குறி வைக்கும். எதிர்க்கூட்டத்தின் தலைவனைக் கொன்றுவிட்டால் மற்றவை சிதறி ஓடும். பலம் பொருந்திய எதிர் ஓநாய் கூட்டத்திற்கு பயந்து எல்லா ஓநாய்களும் சிதறி ஓடுகின்றன. முதலில் கூட்டத்தின் தலைவனைக் குறிவைத்துத் துரத்துகின்றன. இதில் தாய் தன்னுடைய குட்டிகளை அழைத்துக் கொண்டு தப்பிப் பிழைக்க ஓடுகிறது.

எதிரிகள், 40 ஆம் எண் கூட்டத்தின் தலைவனை முதலில் கொன்று விடுகின்றன. வயதில் மூத்த ஆண் ஓநாயையும் கொன்று விடுகின்றன. இறந்த ஆண் ஓநாய்தான் குட்டிகளுக்கு உணவும், வேட்டையாடுவதற்குப் பயிற்சியும் அளித்தது. இப்போது குட்டிகளுக்கு ஆதரவாய் யாரும் இல்லை. தாய் ஓநாய் குட்டிகளை அழைத்துக் கொண்டு தன்னுடைய எல்லையைவிட்டு வேறோர் இடத்திற்கு இடம்பெயர்கின்றது.

கூட்டத்தில் தலைவன் இல்லை. உணவு கொண்டுவந்து தரும் மூத்த ஆணும் இல்லை. நான்கு குட்டிகளை வைத்திருக்கிற தாய் குட்டிகளை விட்டுவிட்டு உணவு தேடிச் செல்லமுடியாத சூழல். எவ்வளவு கடினமான சூழ்நிலை என்றாலும் குட்டிகளை காப்பாற்றியாக வேண்டும். பசிக்கு உண்பதை மறந்து, கிடைப்பதை உண்டு உயிர் பிழைக்கின்றன. பசி முதலில், மனதைக் கொல்லும். பிறகுதான் உடலைக் கொல்லும்.


நாள்கள் நகர்கின்றன. குட்டிகள் இப்போது வரை எப்படி வேட்டையாடுவது என்பதைக் கற்கவில்லை. அவர்கள் நல்ல தலைவனையும், கூடவே நல்ல ஆசிரியரையும் இழந்திருக்கிறார்கள். இப்போது கறுப்பு வெள்ளை என்கிற பாகுபாடெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது, எல்லோரும் பிழைத்தாக வேண்டும். உலகில் பசி மட்டும்தான் தவறுகளை அறிமுகப்படுத்தி பல பாடங்களைக் கற்றுக் கொடுக்கும்.

பாதுகாப்பாய் ஓரிடத்தில் இருக்கும்போது கூட்டமாக வருகிற எல்க் (Elk) வகை மான்களை ஓநாய்கள் பார்க்கின்றன. கறுப்பு ஓநாய் இயல்பிலேயே மூர்க்க குணமும், அசாத்திய பலமும் கொண்டது. இனத்திற்குள் தான் யார் என்பதை நிரூபிக்க இயலாது. அதற்கான நேரம் வரும் வரை காத்திருக்க வேண்டும், அப்படியான நேரம் இப்போது கிடைத்திருக்கிறது. கறுப்பு ஓநாய் மான்களின் கூட்டத்தில் ஒன்றை வேட்டையாடுவது எனத் தீர்மானிக்கிறது. இதையும் விட்டால் இனி வேறு வழியுமில்லை, உணவுமில்லை.

நொடியும் தயங்காமல் மானைத் துரத்துகிறது. மான் பயந்து ஓடுகிறது. எப்படி வேட்டையாட வேண்டுமென ஓநாய் இன்னும் முழுமையாகக் கற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எப்படித் தப்பிப்பது என மானுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல விலங்குகளிடமிருந்து தப்பிய அனுபவம் மானுக்கு இருக்கிறது. ஓநாயின் தாக்குதல் திட்டத்தில் ஏதோ குழப்பம் இருப்பதை மான் கண்டுபிடித்து விடுகிறது. 'தொழிலுக்கு ஓநாய் புதுசு" என்பதைக் கண்டுபிடிக்கிற மான் கறுப்பு ஓநாய் குட்டியை எதிர்த்து நிற்கிறது. எப்படித் தாக்குவது எனத் தெரியாமல் கறுப்பு ஓநாய் பின்வாங்கிவிடுகிறது.

இயற்கை எப்போதும் சில மாறுதல்களையும் நம்பிக்கைகளையும் கொடுத்துக் கொண்டே இருக்கும். இப்போதைக்கு குட்டிகளின் பாதுகாப்புக்கும், உணவுக்கும் தாய் ஓநாய் ஏதாவது செய்தாக வேண்டும். தாய் ஓநாய் ஊளையிட ஆரம்பிக்கிறது. ஆனால் அதன் குரலுக்கு எந்த ஆண் ஓநாயும் பதிலளிக்கவில்லை. பல நாள்கள் ஊளையிட்டும் எந்தப் பலனுமில்லை.

குளிர் கால தொடக்கத்தில் ஒருநாள் ஆண் ஓநாய் ஒன்று இணை சேர்வதற்காக ஊளையிட ஆரம்பித்தது. இதற்காகவே காத்திருந்த குட்டிகளின் தாய் உடனடியாக பதிலளிக்கிறது. ஆண் ஓநாய் ஒன்று புதுவரவாய் கூட்டத்தில் வந்து சேர்ந்து கொள்கிறது. குட்டிகளின் பாதுகாப்பும், உணவும் உறுதி செய்யப்படுகிறது. அப்போதும் கறுப்பு ஓநாய் குட்டி, தனித்தே இருக்கிறது. குட்டிகள் வளர்ந்து 2 வயதை அடைகின்றன. 2 வயது









என்பது ஓநாய்களின் இளம்பருவம். இப்போது அவை இணை சேர்கிற காலம்.

இனி குடும்பத்தில் இருப்பது சரியல்ல, தனித்துச் செயல்படலாம் என்கிற முடிவுக்கு வந்து கறுப்பு ஓநாய் 2002 ஆம் ஆண்டு குடும்பத்தைவிட்டு வெளியேறுகிறது. இதற்கு மேல் உணவு, பாதுகாப்பு எல்லாமே அதை மட்டுமே சார்ந்தது. பனிப்பிரதேசங்களைக் கடந்து யெல்லோஸ்டோன் பூங்காவின் தெற்குப் பகுதிக்கு வந்து சேர்கிறது. 21 ஆம் எண்ணை அடையாளமாகக் கொண்ட வெள்ளை ஓநாய் கூட்டத்தின் எல்லைக்குள் வந்துசேர்ந்தது. 21 ஆம் எண் அந்தக் கூட்டத்தின் பலம் மிக்க ஆண் ஓநாயைக் குறிக்கும். அந்தக் கூட்டத்தில் பெண்

# டின்
# ல்
# னன்





ஓநாய்களே அதிகம்.

கறுப்பு ஓநாய் 21 ஆம் எண் ஓநாய்களின் எல்லையில் மறைந்திருந்து, மற்ற ஓநாய்களை கவனித்துக் கொண்டிருக்கிறது. இதை 21 ஆம் எண் கூட்டத்தில் இருந்த ஒரு வெள்ளை பெண் ஓநாய் பார்த்து விடுகிறது. கறுப்பு ஓநாய் பதுங்கியிருந்த இடத்திற்கு வந்த வெள்ளை ஓநாய் கறுப்பு ஓநாயிடம் நட்பு வைத்துக்கொள்ளும் விதமாக அதனோடு விளையாட ஆரம்பிக்கிறது. இதைக் கூட்டத்தின் பலசாலியான 21 ஆம் எண் ஆண் ஓநாய் பார்த்து கறுப்பு ஓநாயை நோக்கி ஓடிவருகிறது.

இப்போது கறுப்பு ஓநாய்க்கு இரண்டே வாய்ப்புகள்தாம் இருக்கின்றன. ஒன்று அதனோடு சண்டையிட வேண்டும், இல்லையென்றால் அங்கிருந்து தப்பி ஓடிவிட வேண்டும். ஆனால் கறுப்பு ஓநாய் சரணடைவது என்கிற மூன்றாவது வாய்ப்பை எடுக்கிறது. ஆனால் 21 ஆம் எண் ஓநாய் கறுப்பு ஓநாயைக் கடித்து குதறுவதில் குறியாக இருந்தது. இனியும் தாமதித்தால் உயிர்போய்விடும் என்பதால் அதனிடமிருந்து தப்பி யெல்லோஸ்டோன் பூங்காவின் மத்திய சாலைக்கு ஓடுகிறது. அந்தச் சாலையில் இதற்கு முன்பே பத்திற்கும் மேற்பட்ட ஓநாய்கள் வாகனங்களில் அடிபட்டு இறந்திருக்கின்றன. அதனால் 21 ஆம் எண் ஓநாய் மேலும் துரத்தாமல் கூட்டத்திற்கே திரும்பி விடுகிறது. சாலையிலிருந்து 21 ஆம் எண் கூட்டத்தில் இருக்கிற பெண் ஓநாய்களைக் கவனிக்க ஆரம்பிக்கிறது.

21 ஆம் எண் கூட்டத்தில் வேறு ஒரு சிக்கல் நிலவுகிறது. வயது வந்த பெண் ஓநாய்களுடன் இணை சேர ஆண் ஓநாய்கள் அந்தக் குழுவில் இல்லை. இருக்கிற ஆண் ஓநாய் பெண்களுக்கு உறவு முறையாகத் தகப்பன் இடத்தில் இருக்கிறது. ஓநாய்கள் பொதுவாக சொந்தங்களுடன் இணை சேராது. இப்படியான நேரத்தில்தான் கறுப்பு ஓநாய் அங்கு வந்து சேர்ந்திருந்தது. இதன் காரணமாகவே பெண் ஓநாய்கள் கறுப்பு ஓநாயை அங்கிருந்து விரட்டுவதற்கு உடன்படாமல் இருக்கின்றன. இதைக் கறுப்பு ஓநாய் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. 21 ஆம் எண் ஆண் ஓநாய்க்குத் தெரியாமல் கூட்டத்தில் இருக்கிற மூன்று பெண் ஓநாய்களிடம் இணை சேர்ந்து விடுகிறது.

எப்போதும் முரட்டுத்தனமான வெற்றி, கண்மூடித்தனமான காதலை உருவாக்கும். ஆனால் கறுப்பு ஓநாய் யாரிடமும் எந்த விதமான உறவையும் வைத்துக் கொள்ளவில்லை. யாருக்கும் பதில் சொல்கிற நிலைக்கும் கறுப்பு ஓநாய் தயாராகவும் இல்லை. வருவதும் போவதுமாக காதல் மன்னன் வேலையை மட்டுமே செய்து வந்தது. நாள்கள் செல்ல ஆரம்பிக்கின்றன. 21 ஆம் எண் கூட்டத்தின் பெண் ஓநாய்கள் குட்டிகளை ஈனுகின்றன. குட்டிகளை அப்படியே விட்டுவிட்டு கறுப்பு ஓநாயால் செல்ல முடியவில்லை. 21 ஆம் எண் கூட்டத்தின் அங்கத்தினராகக் கறுப்பு ஓநாய் இல்லை என்றாலும், சூழ்நிலை கறுப்பு ஓநாயை, கூட்டத்தின் ஓர் அங்கமாக மாற்றிவிடுகிறது.

21 ஆம் எண் ஆண் ஓநாய்க்கு வயதான காரணத்தால் எதிர்ப்பு தெரிவிக்கும் மனநிலை அதற்கு இல்லை. 2004 ஆம் ஆண்டு 21 ஆம் எண் கூட்டத்தின் ஆண் ஓநாயின் துணை இறந்துவிடுகிறது. துணை இறந்த பிறகு தெற்கில் இருந்த மலைப்பகுதிக்குச் சென்ற ஆண் ஓநாய் அதன் பிறகு மீண்டும் திரும்பவேயில்லை. இப்போது இருக்கிற கூட்டத்திற்கு தலைவன் இல்லாமல் இருக்கிறது. நான்கு பெண் ஓநாய்கள், ஆறு குட்டிகள் இருக்கிற கூட்டத்திற்கு தலைவனாகும்படியான சூழ்நிலை கறுப்பு ஓநாய்க்கு ஏற்படுகிறது. வேறு வழியில்லாமல் கூட்டத்தின் தலைவனாக மாறுகிறது.

காலம் ஒன்றை மறுபடி மறுபடி நிகழ்த்திக் கொண்டே இருக்கும். அது சம்பந்தப்பட்டவர்களுக்கு சாதகமாகவும் இருக்கலாம், பாதகமாகவும் இருக்கலாம். 2005 ஈம் ஆண்டு பலம் பொருந்திய வேறோர் ஓநாய்க் கூட்டம், 21 ஆம் எண் கூட்டத்தின் மீது படையெடுத்து வந்தது. துரதிர்ஷ்ட விதமாக இரண்டாவது முறை தோற்கிற பக்கம் கறுப்பு ஓநாய் இருக்கிறது. அதைவிட வருகிற ஓநாய்களின் மொத்தப் பார்வையும் தலைவன் என்கிற முறையில் கறுப்பு ஓநாயின் பக்கமே இருக்கிறது. இப்போது யோசிக்கும் நிலையில் யாரும் இல்லை, உடனடியாக ஓடியாக வேண்டும். முன்னொரு முறை தன்னைக் காப்பாற்றிய சாலையை நோக்கி கறுப்பு ஓநாய் ஓடுகிறது. சாலைக்கு வருவது ஆபத்து என்று படையெடுத்த ஓநாய்களுக்கும் தெரியும் என்பதால் அவை துரத்துவதை கைவிட்டு வெற்றியைக் கொண்டாடுகின்றன.





மூன்று நாள்கள் கழித்து தன்னுடைய குடும்பத்தை தேடி பனி மலைகளில் பயணிக்கிறது. ஊளையிட்டுக் கொண்டே பயணித்ததால் ஒரு வாரத்திற்குள் தன்னுடைய குடும்பத்தைக் கண்டறிந்து விடுகிறது. இப்போது புதிதாக ஓர் எல்லையை உருவாக்க வேண்டும். அதற்குள் தன்னுடைய கூட்டத்தின் பலத்தை எண்ணிக்கை வழியாக உயர்த்த வேண்டும். ஆனால் தந்தை இடத்தில் இருக்கிற கறுப்பு ஓநாயால் அது சாத்தியமில்லை.

2006 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒருநாள், தனியாக இருக்கிற ஒரு வெள்ளை ஓநாய் ஒன்று கறுப்பு ஓநாய் கூட்டம் இருக்கிற பகுதிக்கு வந்து சேர்கிறது. வந்து சேர்ந்த ஓநாய் இணை சேர்வதற்காக பெண் ஓநாயை எதிர்பார்த்து ஊளையிட ஆரம்பிக்கிறது. இப்போது கறுப்பு ஓநாய் தலைவனாக இருக்கிற கூட்டத்தில் இருக்கிற பெண் குட்டிகள் அனைத்தும் இணை சேருகிற காலத்திற்குள் வந்து சேர்கின்றன. கறுப்பு ஓநாய் அவற்றோடு இணைசேரமுடியாது, இப்போது புதிதாக வந்திருக்கிற ஆண் ஓநாயை விரட்டினால் கூட்டத்தில் இருக்கிற பெண் ஓநாய்களின் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டி வரும் என்பதால் கறுப்பு ஓநாய் அமைதியாக இருந்து விடுகிறது.

இனிவரும் காலங்களில் கூட்டத்தின் எண்ணிக்கையை அதிகரித்தாக வேண்டும். இன்னொரு கூட்டத்திற்கு பயந்து இனியும் ஓடக்கூடாது என்பதால் புதிதாக வந்த ஆண் ஓநாயை ஏற்றுக் கொள்கிறது. அடுத்த மூன்று வருடங்களில் கூட்டத்தின் எண்ணிக்கை 16 ஆக உயர்கிறது. அதில் 7 பலமான ஆண் ஓநாய்கள். இதற்காகத்தான் கறுப்பு ஓநாய் காத்திருந்தது. வாழ்நாளில் முதன் முறையாக எல்லையை விரிவாக்க முதல் தாக்குதலை தொடுக்கத் தயாராகிறது. ஏற்கெனவே விட்டுக் கொடுத்த இடத்திற்கே தன்னுடைய கூட்டத்தோடு செல்கிறது.

புதிதாக ஓர் ஓநாய் கூட்டம் வருவதைப் பார்க்கிற எதிரிகளின் கூட்டம், இடத்தை விட்டு விட்டு அங்கிருந்து ஓடி விடுகின்றன. ஆனால் அவை தற்காலிகமாக அங்கிருந்து கிளம்பி இருக்கின்றன. எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்பதைக் கறுப்பு ஓநாய் தெரிந்தே இருந்தது.


# கதிரைமலைப் பள்ளு

தமிழின் 96 பிரபந்த வகைகளுள் ‘பள்ளு” வடிவமும் ஒன்று. பள்ளு இலக்கிய வடிவம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தோற்றமும் செல்வாக்கும் பெற்றது. தமிழில் தோன்றிய பள்ளு இலக்கியங்களில் முதன்மையானது கதிரைமலை பள்ளு. இதுவே தமிழின் முதல் பள்ளு இலக்கியம் என்றும் கூறலாம். பின்னரே தமிழ்நாட்டில் பள்ளு பிரபந்தம் அறிமுகமானது என்பர். ஆனால், இது ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியது.

கதிரைமலைப் பள்ளு கதிர்காம கந்தனின் தலத்தின் மீது பாடப்பட்டதாகும். இதனை, யாழ்ப்பாண இராச்சியத்தை பரராஜசேகர மன்னன் ஆட்சி செய்தபோது அவனின் அவையில் இருந்த பன்னிரு புலவர்களில் ஒருவரான தென்கதிரைவேலர் இயற்றினார் என்று கூறப்படுகின்றது. ஆனால் இது உறுதிப்படுத்தப்பட்ட தகவல் இல்லை.

130 செய்யுள்களைக் கொண்ட இந்தப் பிரபந்தம் கொண்டுள்ளது. பள்ளிகள் முருகனை வழிபடும் மகாவலி கங்கை நாட்டையும், விநாயகரை வழிபடும் பகீரத கங்கை நாட்டையும் சேர்ந்தவர்களாக படைக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் கதிர்காம ஆலயத்தின் புகழ் பாடப்படுகின்றது.

இலங்கையில் பல பள்ளு நூல்கள் தோன்றினாலும், 4 பள்ளு இலக்கிய நூல்களே அச்சுப் பதிப்பு செய்யப்பட்டன. அவற்றில் கதிரைமலைப்பள்ளும் ஒன்று.






# மிதியடி

மனித நாகரிகத்தின் ஒரு கட்டத்தில் மனிதன் பாதணிகளை அணியத் தொடங்கினான். ஆதிகாலத்தில் பாதணிகளை மிதியடி என்று அழைப்பர். இது பலகையாலோ அல்லது மரப்பாகங்களை கொண்டோ செய்யப்பட்டது. கரடுமுரடான தரை, முள், கூரிய பொருட்களில் இருந்து தன்னைப் பாதுகாத்து கொள்ள இந்த மிதியடி பயன்பட்டது.

இதில் ஒரு வகையான மிதியடியில் முள் போன்ற அமைப்பும் உள்ளது. மழுங்கிய முனை உடையதால் காலுக்கு இதமாக அமையும். இந்த வகை மிதியடிக்கு மருத்துவ குணம் உண்டு. அதாவது எமது உள்ளங் கைகளிலும், பாதத்திலும் எல்லா உறுப்புகளினதும் நரம்பு முடிவிடங்கள் உள்ளன.

இவ்வாறான முள் உள்ள மிதியடிகளை அணிவதால் நரம்பு முடிவிடங்கள் தூண்டப்பட்டு உறுப்புகளின் புத்துணர்விற்கு வழி வகுக்கிறது. பின்னர் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் செயற்கை தோலில் இருந்து பாதணிகள் செய்யப்பட்டு இன்றும் பாவித்துக் கொண்டிருக்கிறோம்.

# ஒடியல் கூழ்

ஒடியல் கூழ் என்பது ஈழத்துத் தமிழர்களின் தனித்துவமான உணவாகும். பனங்கிழங்கை காய வைத்து - திரித்து எடுக்கப்பட்ட மாவைக் கொண்டு இந்தக் கூழ் தயாரிக்கப்படுகிறது. ஒடியல் கூழின் சிறப்பே கடலுணவுகள் சேர்த்து காய்ச்சப்படுவதுதான். அதிலும் உறைப்பு அதிகம் சேர்ப்பது இன்னும் விசேடம். உணவில் மட்டுமல்ல சளி, இருமல் போன்ற தொல்லைகளுக்கும் இது சிறந்த மருந்து.

ஒடியல் கூழ் அருந்துவதில் சில நுணுக்கங்கள் உள்ளன. கூழை அருந்தும்போது பாத்திரங்களை விட பனை ஓலையில் தயாரிக்கப்பட்ட ‘பிளா”வில் அருந்துவது அதிசிறப்பானது. கூழ் குடிக்க அரை மணி நேரம் முன்னராகவோ அல்லது பின்னராகவோ நீர் அருந்தக்கூடாது. கூழ் குடிக்கும்போது அருகிலிருப்பவர்களுடன் பேசக்கூடாது என்பதும் ஒரு விதி. காரணம் கூழில் கரைந்த மீனின் முள்கள் குத்திவிடலாம் என்பதுதான்.





# வயக்கெடல்

வயக்கெடல் என்பது மெலிந்து என்பதைக் குறிக்கிறது. ஒருவரை சந்திக்கும்போது, ‘என்ன நல்லா வயக்கெட்டு போனியள்”, என்று மற்றவர் கேட்டால், அவர் முன்னர் பார்த்ததை விட மெலிந்து போயிருக்கிறார் என்பதைக் குறிக்கும்.

ஒருவர் திடீரென மெலிந்து, சோர்ந்து போவதற்கு நோய்கள் காரணம். இதனால் ‘உங்களுக்கு ஏதாவது வருத்தமா?”, என்று நேரடியாகக் கேட்டு, அவரை சங்கடப்படுத்தாமல், ‘வயக்கெட்டுப் போனியள்” என்று கேட்கும் பழக்கம் இருந்திருக்கலாம்.

# அறுகம் குடா

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ளது அறுகம்குடா. அலைச்சறுக்கு விளையாட்டுக்குப் பிரசித்தி பெற்ற இடம். இதனால் இங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர்.

தமிழர்களின் பாரம்பரிய இடம் சிங்கள மயமாக்கப்பட்டபோது நம்மிடம் இருந்து பறிபோனது. சுற்றுலா பிரசித்தி பெற்றதால் அரச செல்வாக்கால் மேலும் நமது பிடி தவறிவிட்டது.





# நரேந்திரமோடியின் இலங்கை வருகையின் பின்னணி என்ன?

## அமெரிக்காவின் காவல்காரனாகிறதா இந்தியா?

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான சூழலில் நான்கு மணி நேரப் பயணமாகக் இலங்கை வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பயங்கரத் தாக்குதல்களை தடுப்பதற்கு இந்தியா உதவியளிக்கும் என்று பகிரங்கமாகவே உறுதியளித்தார்.

பூகோள அரசியலில் சிக்குண்டுள்ள இலங்கையில் இஸ்லாமிய இயக்கம் ஒன்று தற்கொலைத் தாக்குதல் நடத்தியுள்ளமை அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கே அச்சுறுத்தல் என்ற விமர்சனங்களுக்கு மத்தியில் நரேந்திர மோடியின் கொழும்புக்கான பயணம் அமைந்துள்ளது. இலங்கை வருவதற்கு முன்னர் மாலைதீவுக்குச் சென்ற நரேந்திர மோடி, மாலைதீவின் புதிய ஜனாதிபதி இப்ராஹிம் முஹமட்டோடு பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட ஆறு ஒப்பந்தங்கைளச் செய்துமுள்ளார்.

குறிப்பாக மாலைதீவுக் கடலில் இந்தியா ராடர் கருவிகளைப் பொருத்தி சீனக் கப்பல்களைக் கண்காணிப்புச் செய்வது முக்கியமான ஒப்பந்தமாகும். மோடியின் மாலைதீவு, இலங்கைப் பயணங்களில் பல வியூகங்கள் உண்டு.

பூகோள அரசிலுக்குள் சிக்குண்டுள்ள மாலைதீவு, இந்தியாவைப் புறம் தள்ளி சீன அரசோடு தனது உறவை வளர்த்துக் கொண்டிருந்தது. மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா ஜாமீன் சீனாவுடன் நெருக்கமாகிப் பெருமளவு பணத்தையும் பெற்றுக் கொண்டார். இந்த நிலையில் சென்ற 2018 ஆண்டு டிசம்பர் மாதம் மேற்குலகமும் இந்தியாவும் இணைந்து மாலைதீவில் தமக்குச் சாதகமான ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியது.

தேர்தலில் இப்ராஹீம் முஹமட் வெற்றிபெற்று மாலைதீவில் ஆட்சியமைத்தார். அதன் பின்னர் உடனடியாகவே புதுடில்லிக்கு அழைத்த நரேந்திர மோடி, தனது மாளிகையில் அவரைத் தங்க வைத்து உறவை நெருக்கமாக்கிக் கொண்டார்.

பொதுவாக இந்தியப் பிரதமரைச் சந்திக்கச் செல்லும் வெளிநாட்டுத் தலைவர்கள் எவரும் பிரதமரின் சொந்த மாளிகையில் தங்க வைப்படுவதில்லை. அந்த மரபுக்கு மாறாக மாலைதீவு ஜனாதிபதி இந்தியப் பிரதமரின் மாளிகையில் தங்கவைக்கப்பட்டார்.

ஆனால், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவை, மைத்திரிபால சிறிசேன திடீரெனப் பிரதமராக நியமித்த பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள், அதன் பின்னரான அரசியல் சூழ்நிலைகளின்போதும் நரேந்திரமோடி இலங்கையோடு எந்தவொரு அரசியல் அணுகுமுறைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

மாறாக, இலங்கையில் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து 51 நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற அரசியல் குழப்பங்களையும் அதன் பின்னரான சூழலையும் புதுடில்லி தூர இருந்து அவதானித்துக் கொண்டிருந்தது. இந்த நிலையில், இலங்கையில் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னரான சூழலில் இலங்கையுடன் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் ஏட்டிக்குப் போட்டியாகப் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்ய முனைப்புக் காட்டி வருகின்றன. குறிப்பாக சீனாவுடன் செய்யவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் இந்தியாவுக்கு உடன்பாடானதல்ல.

இவ்வாறானதொரு நிலையில், மாலைதீவைப் போன்று இருக்க இலங்கை பழக்கிக் கொள்ள வேண்டும். இல்லையேல் வேறு விதமான சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என்ற எச்சரிக்கையான செய்தியை கொழும்பில் உள்ள சிங்களத் தலைமைகளுக்கு சொல்வதாகவே நரேந்திர மோடியின் கொழும்புப் பயணம் அமைந்துள்ளது.

மாலைதீவு ஜனாதிபதியுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டது போன்று இலங்கை ஜனாதிபதியுடன் ஒப்பந்தங்கள் எதுவுமே செய்யப்படவில்லை. ஆனால் இந்துமா சமுத்திரப் பாதுகாப்பு, இஸ்லாமிய அடிப்படைவாத இயங்கங்களின் தாக்குதல்களை தடுப்பது போன்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக நரேந்திரமோடி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடித்துரைத்துள்ளார் என இலங்கைப் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதேவேளை, தென் சீனக் கடலில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு மிகவும் முக்கியமானது. தென்சீனக் கடற் பகுதி, சீனாவுக்குச் சொந்தமில்லை என்பது இந்திய அமெரிக்க நாடுகளின் நிலைப்பாடு. ஆனால், அதனைச் சீனா ஏற்க மறுக்கின்றது. தாய்வான் நாட்டுக்கும் சீனாவுக்கும் இடையேயான கடற்பிரதேசம் ஊடாகத் தற்போது அமெரிக்கப் போர்க் கப்பல்களும் அமெரிக்க எண்ணெய்க் கப்பல்களும் சென்று வருகின்றன.

எனினும் இந்தக் கடற்போக்குவரத்துக்கள், சர்வதேச விதிகளை மீறியதாகவே சீனா கருதுகின்றது. ஆனாலும் இந்தக் கடற்பயணத்துக்கு நரேந்திர மோடி அரசும் மறைமுக ஆதரவு கொடுத்துள்ளது. எனவே தாய்வான் கடற்பரப்பின் ஊடாக அமெரிக்கப் போர்க் கப்பல்கள், எண்ணெய்கப்பல்கள் சென்று வரலாமென்றால், இந்தியா - இலங்கைக்கு இடையேயுள்ள பாக்குநீரிணையால் ஏன் சீனாவின் கப்பல்கள் பயணிக்கக் கூடாதென சீனா கேட்கக் கூடிய நிலையும் உண்டு.

இதனால், சீனாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுகின்ற சிங்கள ஆட்சியாளர்களுக்கான மற்றுமொரு எச்சரிக்கையும் நரேந்திரமோடி தனது பயணத்தின் மூலம் இலங்கைக்கு வெளிப்படுத்தியுள்ளார். இரண்டாம் உலகட் போரின் பின்னர் ஐரோப்பாவில் நேட்டோ நாடுகளின் பாதுகாப்பு அணி இருப்பது போன்று, இந்தோ- பசிபிக் சமுத்திரத்தை மையப்படுத்திய இன்னுமோர் இராணுவ பாதுகாப்பு அணி ஒன்றை அமெரிக்கா கட்ட முடித்துள்ளது.

குவாட் (quad) எனப்படும் இந்தப் பாதுகாப்பு அணியை அமெரிக்கா, இந்திய அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகள் இணைந்து உருவாக்கியுள்ளன. இந்த நான்கு மைய அணிகளுக்கிடையேயுட இராணுவ இரகசியங்களை ஒரேவிதமாகப் பரிமாறும் தொழில் நுட்பம், ஒரே வகையான கடற்படைத் தளங்களையும் போர் விமானங்களையும் பயன்படுத்தக் கூடிய நெருக்கமான அணியாகச் செயற்படு வகையில் குவாட் அமைக்கப்பட்டுள்ளது

இந்த இராணுவ அணியோடு இணைந்து தென்னிந்தியக் கடற்பரப்பில் ஏற்பட்டுள்ள பூகோள அரசியல் நகர்வுகள், அற்கான செயல்திட்டங்களை வகுத்தல் போன்ற பொறுப்புக்களை அமெரிக்கா, நரேந்திர மோடி அரசிடம் கையளித்துள்ளது. சுருக்கமாகக் கூறுவதானால் தென்னிந்திய கடற்பகுதியை அண்டிய அமெரிக்காவின் பொலிஸ்காரனாக மோடியின் இந்தியா ஏல மாறிவிட்டது.

இலங்கையில் சிங்கள ஆட்சியாளர்களைட பொறுத்தவரை பூகோள அரசியல் செயற்பாடுகளில் அமெரிக்கா இந்தியாவுட செயற்படுவது போன்று தம்முடனும் நேரடி யாக அணுக வேண்டுமென எதிர்பார்கின்றது, விருப்பமும் உண்டு. ஆனால், நரேந்திர மோடி அரசு அதனை ஏற்காது- அமெரிக்காவும் இந்தியாவைத் தாண்டி அவ்வாறு இலங்கையு டன் பூகோள அரசியல் தொடர்புகளைக் கையாள விரும்பாது. ஆனாலும் அமெரிக்காவின் தெற்காசிய இராணுவ விவகாரங்ளுக்கான உதவிச் செயலாளர் கிளார்க் கூப்பர் கடந்த வாரம் கொழும்புக்கு வந்து இலங்கையுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்துக் கலந்துரையாடியுள்ளார்

இதன் பின்னணியிலேதான் நரேந்திர மோடியின் இலங்கை வருகையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புதுடில்லிக்கு வருமாறு கொழும்பில் நடந்த எட்டு நிமிடச் சந்திப்பில் விடுக்கப்பட்ட அழைப்பையும் நோக்க வேண்டும்.



பெருநகரத்தின் சாலைகளில்
கைகோத்து நடந்த நினைவுகள்
ஓவியச் சட்டகத்தின் காட்சியென
உறைந்திருக்கிறது நினைவுக்கிடங்கில்.
காலத்தைச் சபிக்கும் என்னிடம்
கண்ணீரைத் தவிர
வேறு ஆறுதல் இல்லை.
பலவீனமான சொற்களைக் கொண்டு
நீயில்லாத இந்த மழைக்காலத்தின்
இரவையும் பகலையும்
திட்டித் தீர்க்கிறேன் மாயா

உன் நினைவுகளில்
நான் வந்து போகிறேனா?
நாம் சேர்ந்து பாடிய பாடல் வரிகள்
நினைவிருக்கிறதா?
என்னதான் செய்து கொண்டிருக்கிறாய்
இந்த மழை நாளில்.

சேர்ந்து உறங்கிய இரவுகள்
சிறு குழந்தையாகி அணைத்த கதகதப்பு
நீர்க்குமிழியின் சாயலொத்த சண்டைகள்
ஆசீர்வதிக்கப்பட்ட சொற்களால் ஆன
சமாதானம்
ஏதாவதொன்றை நினைவு கொள்வாய் எனில்
வா மாயா என் கனவிலேனும்.

நீயற்ற என் உலகம்
ஊழிக் காலத்தின் மரண ஓலங்களால்
சூழப்பட்டிருக்கிறது
உன் அன்பை நிரப்பிக் கொடு
என் காலிக் கோப்பையில்.
உன் சொல்லின் போதையில்
இன்றிரவேனும் உறங்க வேண்டும்.

- மனுஷி

# இமையத்தின் எங் கதெ

அருண்ராஜ்

இமையம் அவர்களிடம் இருக்கும் திறமைகளில் ஒன்று தன்னுடைய நாவல்களை எந்தப் பகுதியில் இருந்து கண்டெடுக்கிறாரோ அந்த வட்டார மொழியிலேயே அதை புனைவதே ஆகும். இந்த 'எங் கதெ' நாவலும் அந்த மாலையில் தொடுக்கப்பட்ட ஒரு பூ தான். என்னைப் பொறுத்தவரை உரை நடை மொழியை விட வட்டார மொழியில் படிப்பது கொஞ்சம் கடினமாகவும் வாசிக்கும் வேகமும் குறைந்தே காணப்படும். ஆனால் இந்த நாவல் மடை திறந்த நீர் போல, கூண்டு திறக்கப்பட்ட பறவை போல, சிறிது கூட தடங்கல் இல்லாமல் படிக்க முடிந்தது என்னால். அது தான் இமையம் அவர்களின் தனித் திறமையாகும் போல.

பட்டப்படிப்பு படித்து முடித்துவிட்டு வேலைக்காக அரசாங்கத் தேர்வுகளை எழுதி பொழுதை கழித்துக்கொண்டிருக்கும் விநாயகம் என்ற ஓர் இளைஞன், தன் கணவனை இழந்து தன்னுடைய இரு பெண் குழந்தைகளுடன் அந்தக் கிராமத்துப் பள்ளிக்கு மேலாளராக பதவி கிடைத்து வரும் கமலா, இந்த இருவரின் பேரில் இயற்றப்பட்ட நாவலே எங் கதெ. இதில் விநாயகம், கமலாவை தன் மனைவியைப் போல் தாங்குகிறான். அவளின் தேவைகளை நிறைவேற்றித் தருகிறான்.




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.




கமலாவுக்கு விநாயகம் வெறும் ஆண் துணை போலே இருக்கிறான். விநாயகம், கமலாவின் மேல் உயிரையே வைத்திருக்கிறான். ஆனால் கமலாவிடம் இருக்கும் அந்த இறுக்கக் குணம் அவனுக்குப் பிடிப்பதில்லை. அவனோ அவளிடம் இருந்து பரிவையும் பாசத்தையும் எதிர்பார்க்கிறான். ஆனால் கமலாவோ அப்படிப்பட்டவள் இல்லை. தான் நல்லா இருந்தால் போதும் என்ற குணமுடையவள். இப்படிப் பட்ட இரு வேறு குணம் கொண்டவர்களின் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதே இந்தக் கதை.

பதவி இடமாற்றத்தால் கடலூர் சென்ற கமலாவின் நடவடிக்கையில் முன்பைவிட மாறுதல் ஏற்பட்டிருப்பதைக் கண்ட விநாயகம் மன உளைச்சலில் தவிக்கிறான். கமலா அவனை மூன்றாம் மனிதனைப் போலவே நடத்துகிறாள். பின் அந்த ஊரின் பிரமுகர் ஒருவரால் கமலாவிற்கு வலை வீசப்படுகிறது. இதைத் தெரிந்து கொண்ட விநாயகம், கமலாவிடம் அவன் நல்லவன் போலத் தெரியவில்லை, அவனை விலக்கியே வை என்கிறான். அவளோ அப்படிச் செய்யமுடியாது,

(22ஆம் பக்கம் பார்க்க)

# கிரேஸி மோகன் : நகைச்சுவையின் தனி அடையாளம்

ஹரன் பிரசன்னா

கடந்த நான்கு தசாப்த காலமாக, நம் கவலைகளை எல்லாம் மறந்து நம்மைச் சிரித்து மகிழவைத்த மோகன் ரங்காச்சாரி எனும் கிரேஸி மோகன் தன் 66 ஆவது வயதில், நம்மைப் பிரிந்த செய்தி அதிர்ச்சி அளித்தது. எந்திரவியல் பொறியியலாளராக 1973இல் கல்வித்தகமை பெற்றாலும் எழுத்தாளராகப் பரிணமித்தவர். எதையுமே அவரால் நகைச்சுவையாகத்தான் யோசிக்கமுடியும். நகைச்சுவை அவரது ரத்தத்தில் ஊறிய ஒன்று. அதனால்தான் தமிழின் மிகச்சிறந்த நகைச்சுவைப் படங்களை அவரால் தர முடிந்தது. இன்றளவும் அவர் பங்களித்த நகைச்சுவை தமிழ்த் திரைப்படங்கள் மற்றவர்களால் தொடமுடியாத உயரத்திலேதான் இருக்கின்றன.

ஒரு வார்த்தையை அப்படியே நோண்டி எடுத்து அதிலிருந்து இன்னொரு வார்த்தை, அதிலிருந்து இன்னொரு வார்த்தை என உருவாக்குவதில் சமர்த்தர். அது மட்டும் இருந்திருந்தால் பெரிய விஷயமல்ல. அப்படி இணைக்கப்படும் வார்த்தைகளில் இருக்கும் நகைச்சுவை அட்டகாசமாக இருக்கும். 'காதலா காதலா' நகைச்சுவை வசனங்களுக்கெல்லாம் தியேட்டரில் எப்படிச் சிரித்தோம் என்று இன்னும் நினைவிருக்கிறது.



'மைக்கல் மதன காம ராஜன்' படத்தில் பேரு மதன், மதனேஸ்வரன்னு சுருக்கமா கூப்பிடு வாங்க என்பதெல்லாம் மறக்கவே முடியாது.

'ஸ்ரீ ராகவேந்திரா' திரைப்படத்துக்கு அவர் வசனம் எழுதுவதாக இருந்தது என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். எழுதி இருந்தால் வேறொரு கிரேஸி மோகனையும் சந்தித்திருக்கலாம். 'ரட்சகன்' திரைப்படத்துக்கு கிரேஸி மோகன் வசனம் என்று திரையில் பார்த்த நொடியில் ஆச்சரியமாக இருந்தது. கொஞ்சம் கூட வழக்கமான கிரேஸியை அதில் பார்க்கவே முடியாது. மூன்று முறை சந்தித்தபோதும் கிரேஸி மோகனை ஒரு குழந்தை என்றேதான் உணரமுடிந்தது. இன்று வரை புத்தகக் கண்காட்சியில் சில புத்தகங்களை வாசகர்கள் தேடி வருவார்கள். அதில் ஒன்று கிரேஸி மோகனின் புத்தகங்கள். எளிமையான மனிதர்.

எனக்குப் பதினாறு வயதிருக்கும்போது தற்செயலாக 'பொய்க்கால் குதிரை' என்றொரு படம் பார்த்தேன். வாலி மீது அத்தனை பிரியம் இருந்த நாட்கள் அவை. அந்தப் படத்தில் வந்த பல வசனங்களில் அப்படிச் சிரித்தேன். அது வாலி எழுதியவை என்றே நினைத்திருந்தேன். பின்னர்தான் அது கிரேஸி மோகனின் நாடகம் ஒன்றின் திரையாக்கம் என்றும், அந்த வசனங்கள் கிரேஸி மோகன் எழுதியது என்றும் தெரிந்தது. அதற்கும் முன்பே தூர்தர்ஷனின் பல நாடகங்கள் வழியாக கிரேஸி மோகன் அறிமுகமாகி இருந்தார். அவரது நடிப்பு மிக இயல்பானது.

(22ஆம் பக்கம் பார்க்க)



ரகுல் ப்ரீத் சிங் எப்போதும் உடற்பயிற்சிகளில் கவனத்துடன் இருப்பார். தற்போது, ஆடைகளிலும் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறாராம். ‘நம் வாழ்க்கையைப் போல் ஏன் ஆடைகளும் வண்ணமயமாக இருக்கக்கூடாது?’ என்ற குறிப்புடன் தன் புகைப்படம் ஒன்றை டுவிற்றரில் பதிவிட்டிருக்கிறார் ரகுல்.

நாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் நடித்து வருகிறார் ஜோதிகா. அந்த வகையில், தற்போது கல்யாண் இயக்கத்தில் ‘ஜாக்பாட்’ மற்றும் அறிமுக இயக்குநர் கௌதம் ராஜ் இயக்கத்தில் ‘ராட்சசி’ உட்பட சில படங்களில் நடிக்கிறார்.

இதில் ‘ராட்சசி’ படம், அதிரடி நாயகிக்கான கதையாம். இவை தவிர கார்த்தி, சத்யராஜுடன் இணைந்து ஜீத்து ஜோசப் இயக்கத்தில் பெயரிடப்படாத ஒரு படத்திலும் நடித்து வருகிறார்.





சிறிய இடைவெளிக்குப் பிறகு படம் இயக்கத் தயாராகி வருகிறார், எஸ்.ஏ.சந்திரசேகரன். ஜெய் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில் முதலில் ஐஸ்வர்யா தத்தா மற்றும் அதுல்யா ரவி ஹீரோயினாக ஒப்பந்தமானார்கள்.

சில காரணங்களால் ஐஸ்வர்யா தத்தா விலகிவிட, தற்போது ‘இருட்டு அறையில் முரட்டு குத்து’ படத்தில் நடித்த வைபவி சாண்டில்யா ஒப்பந்தமாகியிருக்கிறார். படத்துக்கு ‘லவ் மேட்டர்’ எனப் பெயர் வைத்துள்ளனர்.

நாயகிகளுக்கு முக்கியத்துவம் உள்ள படங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன. முன்னணி நாயகிகள் பலரும் போட்டி போட்டு இப்படங்களில் நடித்து வருகிறார்கள்.

இந்த வரிசையில் இப்போது இணைந்துள்ளார் ரெஜினா கஸெண்ட்ரா. தெலுங்கு திரைப்படம் ஒன்றில் இவர் நாயகியாக நடித்துள்ளார். வரும் ஆகஸ்ட் மாதம் படம் வெளியாகவுள்ளது.

இயக்குநர் ஆகிறார் மோகன்லால். அடுத்து ‘பரோஸ்’ என்ற மலையாளப் படத்தை இயக்கவிருக்கிறார். இது ஒரு 3டி படமாகவும் இருக்கப்போகிறதாம். படத்துக்காக கடுமையாக உடற்பயிற்சிசெய்து உடல் எடையையும் குறைத்திருக்கிறார்.






ஆந்திரா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் வை.எஸ்.ராஜசேகர ரெட்டியின் வாழ்க்கை வரலாற்றுப் படமான ‘யாத்ரா’வின் இரண்டாம் பாகத்தில் வை.எஸ்.ஆரின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி வேடத்தில் நடிக்க சூர்யாவிடம் பேச்சு நடக்கிறது.

அஜித் நடித்து வரும் நேர்கொண்ட பார்வை படத்தின் படப்பிடிப்பு நிறைவுக்கு வந்துவிட்டது. இவரின் அடுத்த படத்தையும் எச்.வினோத்தே இயக்கவுள்ளார்.

இந்தப் படத்தில் அஜித் மோட்டர் சைக்கிள் ஓட்ட வீரராக நடிக்கவுள்ளார். படப்பிடிப்பு முழுவதும் வெளிநாடுகளிலேயே நடக்கவுள்ளதாம்.



புதுவிதி



# உணவு நம் உரிமை நம் இறைமை

மருத்துவர் நடராஜா பிரபு

பழந்தமிழர் விருந்தோம்பல் பற்றிப் பெருமையாய் நாம் பேசாத நாளில்லை. எம் பண்பாட்டின் உயர்வைப் பறைசாற்றும் இடமெல்லாம் எம் தனிச் சிறப்பு வாய்ந்த உணவு பற்றிக் குறிப்பிட மறப்பதில்லை.

'ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்: முப்பழமொடு பாலன்னம் முகம் கறுத்து ஈவாராயின், கப்பிய பசியினோடு கடும்பசி ஆகுமன்றோ", என்கிறது விவேக சிந்தாமணி. சுவைமிக்க உணவு மட்டுமே விருந்தோம்பல் ஆகாது, விருந்தோம்பும் பண்பே அதன் முழுமையைத் தீர்மானிக்கும் என்பதே பொருள்.

மிகவும் பழமையானதும் சிறப்பானதுமான எம் உணவுப் பண்பாடு அண்மைக்காலத்தில் சீர்குன்றியும் சிதைந்தும் வருவதைக் காண்கிறோம். விரைவுணவுக் (Fast Food) கலாசாரம் விரைந்து பரவிட: செயற்கைச் சுவையூட்டிகளும் பதனிடற் செயன்முறைகளும் உணவின் இயல்பைக் கெடுத்துவிட்டன. பெருவணிக நிறுவனங்களின் இலபாத்திற்காகக் குப்பை மலைபோற் குவியும் இறக்குமதிகளும், மலிவாய்க் கிடைக்கும் எதையும் வாங்கியுண்ணும் மலினச் சிந்[illegible]லைபெற்று விட்டதும் [illegible] பண்பாட்டுக்குச் [illegible] அமைகிறது.

வடக்கின் பாற்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பால் பதனிடலுக்காக தெற்கின் பெரும் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நீரகற்றிய பால்மாவாகத் திரும்பி வருகிறது. பக்கத்தில் இருக்கும் பண்ணையில் பாலை வாங்கியுண்ணத் தயங்கும் நம்மவர் நீரகற்றிய பால்மாவை வாங்கி அதற்கு மீண்டும் நீர் சேர்த்து வெள்ளைச் சீனியும் அதிகம் சேர்த்து அருந்துகின்றனர். தங்கள் பிள்ளைகளுக்கு சொக்லேட் சுவையூட்டப்பட்ட பக்கெற் பாலை வாங்கிக் கொடுக்கிறார்கள். உடல் சுகவீனம் என்றால் இஞ்சித் தேநீர், சுக்கு (வேர்கொம்பு) கோப்பி வீட்டிலேயே தயாரித்து அருந்திய காலம் மாறி 'இஞ்சிச் சோடாவை" தேடி மக்கள் ஓடுகிறார்கள். சோடாவில் செயற்கையான இஞ்சிச் சுவையூட்டியே உண்டு. மருந்துக்கும் இஞ்சி இல்லவே இல்லை.

ஆனால், விவசாயி விளைவித்த இஞ்சி அவன் நிலத்திலேயே கிடந்து அழுகுகிறது. செயற்கைச் சுவையூட்டியை அறிமுகப்படுத்தும் பெருநிறுவனங்களே சந்தை வாய்ப்புக்கேற்ற பயிர்த் தெரிவு பற்றி நமக்குப் பாடம் எடுக்கிறார்கள். கோப்பிப் பானத்தில் கோப்பியில்லை. புளியம்பழ இனிப்பில் புளியே இல்லை எனப் பொய்மைசூழ் உலகில் வாழ நாமும் பழகிவிட்டோம்.

உணவு என்றால் மலிவாகக் கிடைக்க வேண்டும் என்ற தவறான சிந்தனை நம்மிடையே விதைக்கப்பட்டுள்ளது. உணவை மலிவாக உற்பத்தி செய்யும் முயற்சிகளே நமக்கும் பூமிக்கும் அதீத கேடுகள் உண்டாகக் காரணமாகி விட்டன. பீடைகளால் ஏற்படுத்தப்படும் தாக்கத்தைக் குறைக்க கொடிய நஞ்சுகளை பயிர் செய்யும் நிலத்தில் தெளிக்கும்படி விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மனிட குலத்திற்கே நீ நஞ்சு சேர்த்த உணவை வழங்கத் துணிந்தால் மட்டுமே நீயும் உன் பிள்ளைகளும் வறுமையின்றி வாழ முடியும் எனச் சொல்கின்றன ஆபத்தான நஞ்சைப் பீடை நாசினி என்ற பெயரில் விற்கும் விற்பனை செய்யப்படல் போன்ற பல்வேறு விடயங்களில் மாற்றத்தினை ஏற்படுத்த 'உணவுப் பாதுகாப்பு" என்பதைத் தாண்டி உணவு இறைமை" பற்றிச் சிந்திக்க வேண்டும். உணவு இறைமை பற்றிப் பேசும்போது உணவை உட்கொள்ளும் மக்களும் உற்பத்தி செய்யும் விவசாயிகளுமே முக்கிய இடத்திற் கொள்ளப்படுகிறார்கள். உணவு உற்பத்தியில் பெருவியாபாரங்களின் பங்கேற்புக் காரணமாகவும்: தேவையற்று மலிவு விலையில் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள் காரணமாகவும் உள்ளூர் விவசாயிகள் நிறுவனங்கள்.

வேளாண்மையில் கிடைக்கும் வருமானம் முழுவதையும் தாமே உறிஞ்சிக் கொண்டு விவசாயியை தற்கொலை வரை இந்த நிறுவனங்கள் அழைத்துச் சென்றிருக்கும் செய்திகள் இப்போது அடிக்கடி காதில் விழுகின்றன. இந்தச் சூழ்ச்சியில் சிக்கி நிலத்தை மலடாக்கி குடிநீரை நஞ்சாக்கிக் கையில் இருந்த பாரம்பரிய விதைச் செல்வத்தையும் தொலைத்துவிட்டுப் புற்றுநோய், சிறுநீரக செயலிழப்புப் போன்ற கொடுநோய்களின் தாக்கத்திற்குள்ளாகி தனிமரமாய் நிற்கும் நஹம் விவசாயிகளை இந்த நச்சு வட்டத்தில் இருந்து மீட்பதே நம் முன்னால் உள்ள பெருங்கடமை.

'உணவுப் பாதுகாப்பு" என்பது உணவு உரிமை என்பதை மேலெழுந்தவாரியாகவே அணுகுகிறது. உள்ளூர் உற்பத்தியாளர்கள் பற்றிச் சிந்திக்காமல் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள் உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து நியாயமற்ற விலையில் கொள்வனவு செய்யப்பட்டு 'மலிவு" விலையில் சுப்பர் மார்க்கெட்களில் காய்கறிகள் எதிர்நோக்கும் பாதிப்புகள் பற்றிப் பேசாதவரை 'உணவு நம் உரிமை" என்று கூறுவதில் பலனில்லை.

பாதுகாப்பான - போசாக்கான - பண்பாட்டுக்கு ஒத்திசைவான உணவை உற்பத்தி செய்யும் - பெற்றுக்கொள்ளும் உரிமை தனிநபர், மக்கள், சமூகம், நாடுகள் எனச் சகலருக்கும் உள்ளது. உணவு தற்சார்பினை உருவாக்குவதும் உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் விற்பனையைப் பாதுகாப்பதும் ஒழுங்குபடுத்துவதும் மக்களின் தனியுரிமையாகும். உணவு உற்பத்தியுடன் தொடர்புடைய இயற்கை வளங்களாகிய நிலம், நீர், பல்வகை விதைகள், சுதேச விலங்கினங்கள் எனப் பரந்துபட்ட பல்வகைமையை முகாமை செய்யும் உரிமை மக்களுடையதாகும்.


சூழல், சமூகம், பொருண்மியம் மற்றும் பண்பாட்டுக்கு ஒத்திசைவாக, நிலம், நீர், விவசாயம், மீன்பிடி, ஆளணி முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகளை உருவாக்கும் உரிமையும் மக்களுக்கு உண்டு. மேற்குறித்த விடயங்களை நுணுக்கமாக ஆராய்ந்தால் உணவு நம் உரிமை மாத்திரம் அல்ல அது நம் இறைமையும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். மக்கள் சார்பில் மேற்குறித்த விடயங்களை மேற்கொள்வது மக்கள் பிரதிநிதிகளின் கடமை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அடிப்படை உரிமையாகிய உணவு கிடைப்பதை உறுதி செய்ய முறை[illegible] மற்றும் அமுலா[illegible] இதனை பிரதேச சபைகள், மாகாண சபைகள், மற்றும் நாடாளுமன்றில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இயற்கை வழிக்குத் திரும்புவோம்! இயல்பாய் வாழ்வோம்!

நன்றி: இயற்கைவழி செய்தி மடல்



நிலவன்



# வியூகம் வகுக்கும் மைத்திரி

**2014** இறுதிக் காலப்பகுதி நாடு மட்டுமல்ல, சர்வதேசமும் பரபரக்கிறது. இலங்கையின் ஜனநாயக சர்வாதிகாரியாக - நவீன பாசிசத்தின் புதிய வடிவமாக மஹிந்த ராஜபக்ஷ தோற்றம் கொண்டு விடுவாரா என்பதுதான் அந்தப் பரபரப்புக்குக் காரணம்.

மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் ஜனாதிபதியாக மூன்றாவது தடவையாகவும் அமர வைக்கப்படும் பட்சத்தில் நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் பல விளைவுகளை ஏற்படுத்தும். அதுவும் மேற்குலகு - அதன் ஆதரவு சக்திகளின் ஆதிக்கத்திலிருந்து நழுவிவிடும் என்ற ஆபத்து இருந்தது. இந்நிலையில்தான், மேற்குலகுக்கும், சிறுபான்மை இன மக்களுக்கும், மஹிந்தவுக்கு எதிரானவர்களுக்கும் ஆபந்பாந்தவனாக வந்தார் மைத்திரிபால சிறிசேன.

அந்நேரத்தில், மோடி அலை ஆதிக்கம் பெற்றிருக்க மோடியின் பாணியில் வாக்குகளைக் கவர ஆரம்பித்தார். பிரசாரத்தின்போது ஒரு தடவை மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிப்பேன் - அதுவும் 4 ஆண்டுகள் மட்டுமே பதவி வகிப்பேன் என மேற்கத்தைய நாடுகளின் கனவான்கள் போல தன்னை அடையாளப்படுத்தி மக்களை ஈர்க்க ஆரம்பித்தார். மக்களை இவர் கவர்ந்தாரோ இல்லையோ மூன்றாவது முறையாகவும் மஹிந்த ஜனாதிபதி ஆவதை நாட்டின் பெரும்பங்கு மக்கள் விரும்பவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் பறைசாற்றின.

தொடர்ந்து, நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தன. தங்களின் இணைவு நாட்டுக்கு நல்ல ஆட்சியைத் தரும் என்று மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் 'நல்லாட்சி" என்று பெயரிட்டு தமது ஆட்சியை இரு பகைமைக் கட்சிகளும் தொடங்கின.

'புதுவிளக்குமாறு நன்றாகக் கூட்டும்" என்ற மரபுத்தொடர் தமிழரிடையே உண்டு. அதுபோல்தான் நல்லாட்சியின் ஆரம்பமும். ஜனாதிபதி மைத்திரியும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து நல்லாட்சியை ஏற்படுத்தத் துடித்தனர். ஆனால், இருவருக்குள்ளும் ஒரு வருடத்திலேயே பகைமை மீண்டும் தொட்டுவிட்டது.

அதன் பின் நடந்தவை மக்கள் அறியாததல்ல. நல்லாட்சிக்குப் பதிலாக கோமாளி ஆட்சியே அரங்கேறியது. இதன் விளைவைத்தான் இன்று நாடு அறுவடை செய்கிறது. ஆட்டம் காணும் பொருளாதாரம், எகிறும் விலைவாசிகள், புத்திஜீவிகளின் வெளியேற்றம், கொந்தளிக்கும் மத வாதத்தால் நாட்டில் நீடிக்கும் பதற்ற - அமைதியற்ற நிலை என இந்தப் பட்டியல் நீள்கிறது.

நிலையான ஆட்சி - அது எந்தக் கட்சியாக அல்லது கூட்டணியாக இருந்தாலும் தொடர்ந்து முழுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை மக்களின் விருப்பம். மேலும், அடிக்கடி தேர்தல்களை எதிர்கொள்ளும் அளவுக்கு நம் நாட்டின் பொருளாதார நிலையும் இல்லை. மக்களும் அதற்குத் தயாராக இல்லை. இந்நிலையில்தான் ஜனாதிபதி தேர்தலுக்கான காலம் நெருங்கி வருகிறது. சிலவேளைகளில், இத்தேர்தலுக்கு முன்பாகவே நாடு பொதுத் தேர்தலை சந்தித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது எப்படி இருந்தாலும் 2020 இல் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே ஆகும். இந்நிலையில், '4 ஆண்டுகளே ஆட்சியில் இருப்பேன் - ஒரு தடவையே பதவி வகிப்பேன்", என்று வாக்குறுதிகளை அள்ளி வீசிய மைத்திரியை அதிகார ஆசை இப்போது பாடாய்படுத்துகிறது. சாதாரண பதவியா ஆசை அறுத்துச் செல்ல, 'ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றமுடியாதே தவிர மற்ற அனைத்தும் என்னால் முடியும்", என நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்திய ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறிய வாசகங்களை நினைவுமீட்பது, இதன் அதிகாரத்தை விளக்க உதவும். சாதாரணமாக சிறிய அதிகாரங்களே மனிதர்களை மாற்றி விடும்போது நாட்டின் உச்ச அதிகாரம் எப்படி ஒருவரை மாற்றிவிடும் என்பதை சாதாரணரும் உணரக்கூடியதுதானே!

இந்த ஆசையால்தான் இப்போது மைத்திரி இரண்டாது தடவையும் ஜனாதிபதி பதவியைக் கைப்பற்ற தந்திரக் காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளார். மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களின் நம்பிக்கையை மட்டும் இழந்துவிடவில்லை. அவரின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகூட தனது பலத்தை இழந்துள்ளது. இவை இரண்டும் அவர் போல் மலைபோலுள்ள பலவீனங்கள். இந்தப் பலவீனங்களை வெற்றிகொள்ளவே அவர் மூன்று வியூகங்களை வகுத்துள்ளார்.

**வியூகம் 01** : பொதுஜன முன்னணியுடன் கூட்டணி ஒன்றை ஏற்படுத்துதல். இதன் மூலம் பொதுவேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பெயரிடப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த கூட்டணி அழைப்புக்கு பொதுஜன முன்னணியில் எந்த இணக்கத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை. காரணம் அவர்கள் தங்களின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை களமிறக்குவது உறுதியாகி விட்டது. ஆனாலும், முன்னணியினரை திருப்திப்படுத்தி இணக்கத்துக்கு வரவைக்கும் முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன. அதனால் இந்த வியூகம் அவருக்கு கைகொடுக்குமா என்பது தெரியவில்லை.

**வியூகம் 02:** ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் ரணில் அல்லாத ஒருவர் சபாநாயகர் கருஜெயசூரிய அல்லது பிரதிதலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ வேட்பாளராக நிறுத்தப்படும் பட்சத்தில் தனது ஆதரவை வழங்குவதற்கு அவர்களுக்கு வழங்க ஜனாதிபதி மைத்திரி பச்சைக்கொடி காட்டியுள்ளார். இந்த இணக்கத்தின் அடிப்படையில் மீண்டும் ஐ.தே.க., ஸ்ரீல.சு.க. கூட்டணியை அமைத்து ஜனாதிபதி பதவியைப் பிடிப்பது. சிலவேளைகளில் இந்த டீல் ஒத்துவராவிடின் ஜனாதிபதி பதவிக்குப் பதிலாகப் பிரதமர் பதவியை பெறுவதே அவரின் நோக்கம்.

**வியூகம் 03:** இந்த இரு டீல்களும் ஒத்துவராவிடின், அதவாது 'எட்டாப் பழம் புளிக்கும்" என்பதுபோல், ஜனாதிபதி வேட்பாளர் ஆசையை விட்டுக் கொடுப்பது அதற்குப் பதிலாக அமையும் பொதுஜன பெரமுனவின் அரசில் முக்கிய இடம் வழங்கப்படுவதுடன் சுற்றாடல், மகாவலி அபிவிருத்தி அமைச்சுகளை தன்னிடம் தந்துவிட்டால் பொதுஜன பெரமுனவிற்கு சாதகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நகர்வார்.

பதவியைக் காப்பாற்றிக் கொள்ள இந்தப் பாடுபடுவதும் - வியூகம் வகுத்து செயற்படுவதும் தனது பதவியைத் தக்க வைக்கவே. மக்களை மதிக்காது - நிர்வாகத்தில் கோட்டை விட்டுவிட்டு - ஊழலையும், லஞ்சத்தையும் பெருக விட்டு - நாட்டை போதைக்கும், மத, இனவெறிக்குப் பறிகொடுத்துவிட்டு இப்போது மீண்டும் பதவிக்காக ஆசைப்படுபவரை என்னவென்று சொல்வது.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 82

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

பரமசிவமும் ஏனையோரும் வன்னேரிக்குளம் வந்து மூன்று நாள்களாகிவிட்டன. இடம் பெயர்ந்து வந்தவர்களில் ஒரு பகுதியினர் ஜெயபுரத்திலேயே தங்கிவிட்டனர். அங்கு அவர்கள் தங்குவதற்காக நீண்ட கொட்டில்களைப் புனர்வாழ்வுக் கழகமும் கத்தோலிகக மத நிறுவனங்களும் அமைத்துக் கொடுத்தன. உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் சங்கங்கள் ஊடாக நிவாரணங்களும் வழங்கப்பட்டன.

இன்னொரு பகுதியினருக்குப் புனர்வாழ்வுக் கழகம் ஆனைவிழுந்தானில் மண்டபங்களைத் தடிகளாலும் ஓலைகளாலும் அமைத்துக்கொடுத்திருந்தது. மல்லாவி, துணுக்காய் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தோர் பெரும்பாலானோர் முறுகண்டிப் பாடசாலையிலும் கிளிநொச்சியிலும் தங்கினர்.

வன்னேரிக் குளத்தில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் பலர் தங்கியிருந்தபோதிலும் ஒப்பீட்டளவில் அங்கு நெருக்கடி குறை வாகவே காணப்பட்டது. வேட்டைக்கார நல்லையாவின் காணியில் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாக ஒவ்வொரு சிறு கொட்டில்களைப் போட்டுக்கொண்டனர்.

அவரிடம் நிறையவே காட்டுத் தடிகளும் ஓலைகளும் இருந்த காரணத்தினால் அது அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை.

முருகர், குளத்தில் போய் இரும்புப் பட்டத்தால் அடித்து மீன்பிடித்து வந்தார். அது அவருக்குக் கைவந்த கலை. எனவே ஒவ்வொரு நாளும் மீனுக்குப் பஞ்சம் இருக்கவில்லை. வேலாயி போய் விதானையாரிடம் பதிந்து மறுநாள் நிவாரணப் பொருட்களை எடுத்து வந்தாள். அதைக் கண்டுவிட்டு முருகரும் போய் பொருட்களை எடுத்துவந்தார். பரமசிவம் குடும்பமும் வேலுப்பிள்ளை குடும்பமும் போக மறுத்துவிட்டன. பரமசிவம், "நெல்லு முடிஞ்சால் பிறகு பாப்பம்", எனச் சொல்லி விதானையாரிடம் புறப்பட்ட பார்வதியையும் மறித்துவிட்டார்.

அன்று மதிய உணவை முடித்துவிட்டு மாமரத்தின்கீழ் பரம சிவமும் முருகரும் இடப்பெயர்வு பற்றியும், எதிர்காலம் பற்றியும் கதைத்தனர். அப்போது முருககர், "பரமசிவம்! வரவவர உவன் சுந்தரத் தின்ரை போக்கு அவ்வளவு நல்லமாதிரி படயில்லை. எந்தநேரமும் இயக்கப்பொடியளோட தான் திரியிறான்", என்றார்.

அவர் சொன்னது உண்மை தான் அவன் போராளிகளுடன் சேர்ந்து அகதிகளுக்கு உதவுவது, கொட்டில்கள் அமைத்துக் கொடுப்பதுபோன்ற விஷயங்களில் மும்முரமாக ஈடுபட்டான். இரவு எட்டு ஒன்பது மணிக்குப் பிறகே வந்து சாப்பிடுவான். "எங்களாலை ஏலாது.... அவனெண்டாலும் செய்யட்டன்", என்றார் பரமசிவம்



சர்வசாதாரணமாகவே.

"உப்பிடித் திரிஞ்சுபோட்டுத் தான் ஒருநாள் சிவம் இயக்கத்துக்குப் போனவன் எண்டதை மறந்துபோனியே?"

முருகரின் கேள்வி பரமசிவத்தை உலுப்பிவிட்டது. "அப்ப இப்ப என்ன செய்யிறது?"

"அதுதானே அவன்ரை கலியாணத்தை முடிச்சுவிடு எண்டு அண்டைக்கே சொன்னனான். பெட்டையும் கையுக்கை இருக்கிறாள்", என்றார் முருகர்.

பரமசிவம் சற்று நேரம் யோசித்துவிட்டு, "செய்யத் தான் வேணும்... இந்த இடப் பெயர்வுக்கை...", என இழுத்தார்.

"இந்த இடப்பெயர்வு எப்ப முடியும் எண்டு சொல்லமுடியாது. அது மட்டும் பார்த்தால் வீட்டுக்கு ஒருதர் எண்டு பெட்டையும் போயிடுவாள். பொடியனும் தானாய் போயிடுவான்"

"அப்ப என்ன செய்யிறதெண்டு சொல்லன்", எனக் கேட்டார் பரமசிவம்.

முருகர் வெகு நிதானமாக, "நான் பின்னேரம் பிள்ளையார் கோயில் ஐயரிட்டைப் போய் நாள் பார்த்துக் கொண்டுவாறன். சோத்தைக் குடுத்து விடுவம். பிறகு வசதிப்படேக்கை தாலியைக் கட்டிக்கொள்ளலாம்", என்றார் பரமசிவத்தின் முகத்தைப் பார்த்தபடியே.

"சரி பின்னேரம் போவம். நானும் வாறன்", என்றார் பரமசிவம்.

அன்று மாலை ஐயர் பஞ்சாங்கத்தைப் பார்த்துவிட்டு இன்னும் பத்து நாள்களின் பின்னர் வரும் வளர்பிறையின்போது நல்ல நாள் இருப்பதாகக் கூறினார். ஐயரிடம் ஐம்பது ரூபா தாளைக் கொடுத்துவிட்டு இருவரும் வீடுநோக்கிப் புறப்பட்டனர்.

அன்று இரவு உணவு முடிந்தபின்பு பரமசிவம் பார்வதி, வேலாயி, பெருமாள் ஆகியோரைத் தனக்கு முன்னால் வந்து அமரும்படி கூப்பிட்டார். அவர்கள் வந்த பின்பு கலியாணத்துக்கு நாள் வைக்கப்பட்டுவிட்ட விஷயத்தைச் சொன்னார். அவர் யாரிடமும் சம்மதம் கேட்கவில்லை. அப்பிடிக் கேட்டுப் பழக்கமும் இல்லை. எப்போதுமே அவர் சொல்வதுதான் முடிவு.

பார்வதி மெல்லிய தயக்கத்துடன், "எங்கடை வீட்டை நடக்கிற முதல் விஷேசம்... வடிவாய் செய்யிறது..." என்றுவிட்டு நிறுத்தினாள்.

"இப்ப வடிவாய் செய்யிற நிலைமையிலேயே நாங்கள் இருக்கிறம்", என்ற பரமசிவத்தின் கேள்வியுடன் பார்வதி மௌனமானாள்.

பெருமாள், அனுங்கிய குரலில், "ஐயா நாங்கள் கூலியள்... நீங்கள் எங்கை... நாங்கள் எங்கை?" என முனகினார்.

"அது எனக்கும் விளங்கும்", என்றார் பரமசிவம்.

சற்றுத் தொலைவில் இருந்த முருகேசர், "பரமசிவம், அவள் பிள்ளை பார்வதி சொல்லுறது சரிதானே?" என்றார்.

பரமசிவம் எப்போதுமே முருகேசருக்கு தனி மரியாதை கொடுப்பதுண்டு.

"அண்ணை எனக்கும் வடிவாய் செய்ய விருப்பம்தான். இப்ப அதுக்கு காசு பணம் கிடக்கே?" எனக் கேட்டார் அவர்.

முருகேசர் ஒரு மெல்லிய சிரிப்புடன், "பொடியன் அனுப்பிற காசிலை கொஞ்சக் காசு சேர்த்து வைச்சிருக்கிறன். தாறன் ஒரு தாலிக் குடத்தைச் செய்து மஞ்சள் கயித்திலை கோத்துப் போட்டு பிள்ளையாரிட பூசைக்கு வைச்சிட்டு கட்ட வேண்டியதுதானே" என்றார்.

"அண்ணை உன்ரை காசு...?"

"நீ... வாயை மூடு வசதி வரேக்கை பொடியன் உழைச்சுத் திருப்பித் தருவான்", என்றார் அவர் கண்டிப்புடன்.

அதற்கு மேல் பரமசிவத்தால் எதுவும் சொல்லமுடியவில்லை. எல்லாவற்றையும் கொட்டிலுக்குள் இருந்துகேட்டுக்கொண்டிருந்த முத்தம்மா வானத்தில் பறக்க ஆரம்பித்தாள். ஆனால், அந்த சந்தோஷம் ஒரு மாதம் மட்டும் தான் என நினைத்தபோது வானத்திலிருந்து நிலத்தில் விழுந்தாள். எனினும் நாட்டுக்காகப் போராட முடியாவிட்டாலும் இப்படியாவது ஒரு பங்கை வழங்க முடிகிறதே என நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டாள். எப்படியிருந்தபோதிலும் எல்லோர் மனதிலுமே மகிழ்ச்சி கரைபுரண்டோட ஆரம்பித்தது.

அந்த நேரம் வேட்டைக்கார நல்லையா நல்ல வெறியில் வந்தார். வந்தவர், "என்ன முருகரப்பு... வாற கிழமை என்ரை வீட்டை கலியாணம் எண்டு ஐயர் சொன்னவர். ஆருக்கு எனக்கே?" என்றார்.

முருகர் பெரிதாகச் சிரித்து விட்டு, "என்னடா.... இப்பவே இரண்டை வைச்சு சமாளிக்க ஏலாமல் திண்டாடுறாய்... மூண்டாவதும் உனக்கு வேணுமே?" எனக் கேட்டார்.

"ஓ... ஓ... கரைச்சல்தான் அதைவிட... அப்ப ஆருக்கு?"

"பரமசிவத்தின்ரை பொடியனுக்கு", என்றார் முருகர்.

"அடி சக்கையெண்டானாம்... பரமசிவமண்ணை... நாலாம் சடங்குக்கு நல்ல கலைமானாய் வேட்டையாடிக் கொண்டு வாறன் நான்... நீ முட்டி முட்டியாய் கள்ளு எடுக்கவேணும் சரியே?" என்றான் நல்லையா.

'அது நான் செய்யிறன்", என்றார் முருகர்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



# ஒரு புன்னகையின் விலை தெரியுமா...?

போர்த்துக்கல் நட்சத்திர காற்பந்தாட்ட வீரர் றொனால்டோ விளையாட்டால் கொள்ளை கொள்ளையாக சம்பாதிப்பது உங்களுக்கு தெரியும். இந்த இரண்டு கால்களையும் கொண்டுதானே இந்தச் சம்பாத்தியம்? எனவே அந்தக் கால்களும் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. 144 மில்லியன் டொலர் தொகைக்கு இவரது கால்கள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் இங்கிலாந்தின் நட்சத்திர உதைபந்தாட்ட வீரராக இருந்த டேவிட் பெக்ஹாம் காப்புறுதி செய்த தொகையை விட(70 மி. டொலர்) இவர் தொகை அதிகம். இன்னொரு பிரபலமான ஜெனிபர் லோப்பெஸ் எந்த உடல் உறுப்பை காப்புறுதி செய்துள்ளார் தெரியுமா? நடிகையும் பாடகியுமான இவர் தன் "பின்னழகை" 300 மில்லியன் டொலர் தொகைக்கு காப்புறுதி செய்துள்ளாராம்.

நடிகையும் , மொடலிங் செய்பவரும் வர்த்தகப் பிரமுகருமான கிம்கார்டஷியான் தனது "பின்னழகை" 21 மில்லியன் டொலருக்கு காப்புறுதி செய்துள்ளார். தனது அழகான புன்சிரிப்பை 30 மில்லியன் டெலர் தொகைக்கு காப்புறுதி செய்துள்ளார் ஹொலிவுட் பிரபல்யமான ஜூலியா றொபேர்ட்ஸ். ஜேம்ஸ் பொன்ட் பிரபல்யமான டானியல் கிரெய்க் தன் உடலை 9.5மில்லியன் டொலருக்கு காப்புறுதி செய்துள்ளார்.

**விசித்திரமான உலகம்தான்...!**

# பலி எடுக்கும் எவரெஸ்ட்

உலகின் அதி உயர்ந்த மலையான எவரெஸ்டிலிருந்து சுமாராக 11 தொன் எடை கொண்ட கழிவுகளைச் சேகரித்து தரைக்கு கொண்டு வந்துள்ளார்கள். இதில் ஒட்சிசன் சிலிண்டர்கள் தொடக்கம், வெற்று ரின்கள், போத்தல்கள் என்று பல ரகப்பட்ட கழிவுகள். மீட்கப்பட்ட குப்பைகளில் ஒரு பகுதி மீள்சுழற்சிக்காக காத்மண்டுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

6100 மீற்றர் உயரத்திலுள்ள கூடாரம் 1, கூடாரம் 2 (6,400மீ.) இல்தான் அதிக கழிவுகள் சேகரிக்கப்பட்டனவாம். அனேகமானவர்கள் இங்குதான் தங்கியிருந்து தங்கள் நெடும் பயணத்தைத் தொடர்கிறார்கள். இப்போது பனி உருகும் காலம் என்பதால், இதுகாலவரை பனியில் மறைந்திருந்த நால்வரின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டு, ஆள் அடையாளத்திற்காக, மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

1953 இல் முதற் தடவையாக எவரெஸ்ட் உச்சியை அடைந்த காலந் தொடக்கம்



இன்றுவரையில் 300 பேர் மலையேறும்போது மரணித்தனர் எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இன்னும் எத்தனை உடல்கள் மலையில் கிடக்கின்னறன என்பதுபற்றிய புள்ளி விவரங்கள் தம்மிடம் இல்லை என்கிறார்கள் அதிகாரிகள்.


# குதியுயர் காலணிக்கு ஒரு கும்பிடு

வேலைக்கு வரும்போது குதியுயர் காலணி அணிவதை எதிர்த்து, ஒரு குழுவாக ஜப்பானிய பெண்கள் அரசிடம் தங்கள் எதிர்ப்பு மனுவைச் சமர்ப்பித்துள்ளனர். கட்டாயமாக குதியுயர் காலணி அணிந்து அலுவலகத்திற்கு வரவேண்டும் என்பதையே இவர்கள் எதிர்க்கிறார்கள்.

எழுத்தாளரும் நடிகையுமான யுமி இஸிகாவா இணையத்தில் இந்த எதிர்ப்பை ஆரம்பித்து வைத்த பின்னர், உடனுக்குடன் 19,000 ஜப்பானிய பெண்களின் ஆதரவு இவருக்குக் கிடைத்துள்ளது. பல நிறுவனங்களில் பணியாற்றவும், புதிய வேலை தேடவும் குதியுயர் காலணி அணிவது என்பது இங்கு கட்யாயமாக உள்ளது எனப் பெண்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே இதைத் தடைசெய்ய சட்டம் கொண்டுவரும்படி, அமைச்சு அதிகாரிகளிடம் விண்ணப்பித்திருக்கிறோம் என்கிறார் இஸிகாவோ. தன்னை ஒரு பெண் அதிகாரியே சந்தித்தாகவும், முதற்தடவையாக எங்கள் குரல்கள் செவிசாய்க்கப்பட்டுள்ளன என்று மகிழ்வோடு கூறுகிறார் இவர்.



2015 இல் பிரான்ஸில் இடம்பெற்ற பெற்ற உலகத் திரைப்பட விழாவின்போது, குதியுயர் காலணிகளை அணியாதவர்களை செங்கம்பளத்தில் நடக்க அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. பின்பு திரைப்பட விழா இயக்குனர்இதற்காக மன்னிப்புக் கோரியிருந்தார். 2017இல் கனடிய மாவட்டமான பிரிட்டிஷ் கொலம்பியா. உயர்ந்த பாதக் காலணிகள் ஆரோக்கியத்திற்கு கேடானவை என்று கூறி , நிறுவனங்கள் இதை அணிவதற்கு பெண்களை வற்புறுத்தத் தடை விதித்திருந்தார்கள்.




# படப்பிடிப்புத் தளத்தில் குண்டுவெடிப்

புதிதாகத் தயாராகிக் கொண்டிருக்கும் ஜேம்ஸ் பொண்ட திரைப்படத்தின் படப் பிடிப்பு, தடை தாண்டல் போட்டிபோல, பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கின்றது. இந்தத் தடவை திரைப்படத்தில் வருவது போல நிஜத்தில் குண்டு வெடிப்புகள் மூல படப்பிடிப்புத் தளத்தை அதிர வைத்துள்ளன. சிலர் காயப்பட்டும் உள்ளார்கள்.

மேற்கூரை பிய்த்தெறியப்பட்ட ஒரு குண்டுவெடிப்பில், ஒருவர் படுகாயமடைந்தார். ஆபத்தான காட்சிகளில் கதாநாயகனுக்கு பதிலாக "ஸ்டன்ட்" வேலை ஒன்ை செய்யும்போதே இந்த வெடிப்புகள் சம்பவித்துள்ளன. படப்பிடிப்புத் தளம் அதிர்வால் சரிந்து விழுந்ததில ஒருவர் அகப்பட்டுள்ளார். இந்தப் புதிய ஜேம்ஸ் பொண்ட் திரைப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பித்த காலம் தொடக்கம் பல வழிகளில் பிரச்சினைகள் உண்டாகி வருவதாக சொல்லப்படுகின்றது.

இது 25 ஆவது ஜேம்ஸ் பாண்ட் திரைப்படமாகும். முன்பொரு தடவை கதாநாயகனான டானியல் கிரெய்க் படப்பிடிப்பு சமயம் தவறி விழுந்ததால் காயப்பட்டு, ஒரு வார காலம், இவர் படப்பிடிப்பில் கலந்து கொள்ளவில்லை. மூன்று வாரங்களுக்கு முன்பு ஜமேக்காவில் படப்பிடிப்பு நடந்தபோது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த மார்ச் மாதம் திரைப்பட இயக்குனருக்கும் கதாசிரியருக்கும முரண்பாட்டால் படக் குழுவிலிரு விலகியிருந்தார்.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

### நக்கினால் நாவிழக்கத்தானே வேணும்

வேரிட்டைச் சொல்லி அழவோ? இதை நான் ஆரிட்டைச் சொல்லிஅழ? எண்டு என்ரை மனம் அந்தரிச்சிது.

நானா மார் எல்லாரும் ஒண்டு சேந்திட்டினம் எண்டு கேள்விப் பட்ட உடனை எங்கடையிலை ஒண்டு எங்களுக்கை இருக்கிற சம்பந்தமில்லாத ஆளிட்டைப் போய்க் கேட்டுதாம் "ஐயா வெளியிலை எங்களாலை தலை காட்டேலாமைக் கிடக்கு. நலுமுண்டைத் தலையிலை போட்டுக் கொண்டுதான் போக வேண்டிக் கிடக்கு. இப்பவும் "நொட் லேட்". எல்லாரையும் கூப்பிடுங்கோ. கதைச்சுப் பாப்பம். கன நாளைக்கு இல்லாட்டிலும் இந்தக் கோவக்கார உறவுகள் கலயாண வீடு, பூசை வீடுகளுக்கு ஒண்டு சேருற மாதிரி அதுவும் ஒண்டு சேந்து சாப்பிடுற மாதிரி இல்லாட்டிலும் படத்தையும், வீடீயோவையும் எடுத்துப் போட்டுக் காட்டி உவங்களையும் வெருட்டலாம். அதே நேரத்திலை எங்கடை சனத்தின்ரை வாயையும் அடைக்கலாம். என்ன சொல்லுறியள்? - எண்டு கேட்டதுக்கு அவர் சிரிச்சாராம்.

எட அவங்கள் சேத்திட்டாங்கள் எண்டதைப் படத்திலை மட்டுந்தானே பாத்தனியள். அவங்கடை மனத்துக்குள்ளை உள்ளிட்டுப் பாத்தனியளே? இப்ப நடந்ததுக்கு முஸ்லிம் சனத்தை நாங்கள் குறை சொன்னாங்களே? பயங்கரவாதியளைத்தானே குற்றம் சொல்லுறம். அது மாதிரி முஸ்லிம் சனம் ஒண்டாச் சேந்ததே? அவையின்ரை தலைவர்கள் எண்டு தங்களைச் சொல்லுறவை மட்டும் தானே சேந்திருக்கினம். அதுகும் அவை சேந்திட்டம் எண்டு சொல்லிப்போட்டு எடுத்துப் போட்ட படத்திலை பாத்தனியே, அவையின்ரை முகம் எல்லாம் பேய் அறைஞ்சமாதிரியும், எங்கடை கோயிலிலை உள்ள நவக்கிரகங்கள் மாதிரியும் ஆளை ஆள் பாராமலுந்தான் இருந்தவங்கள். அவையளுக்கை யும் ஆயிரம் பிச்சுப் புடுங்கலுகள் இருக்கிது. உதுகும் ஒரு நடிப்பெண்டு தெரியுதோ? எப்ப நாங்களும் நடிக்க வேணும் எண்டு சொல்லுறியளோ? எங்கை சனத்திட்டைக் கேள். என்ன சொல்லுவினம் எண்டதை. சனத்தின்ரை நாடியைப் பிடிச்சுப் பார்? என்ன சொல்லுதெண்டு.

இப்ப கிட்டடியலை நடந்த விசியத்தைப் பார் உவங்கடை ஆக்களை காட்டிக் குடுத்தது முழுக்க முழுக்க உவங்கடை அண்ணன் தம்பிமார் தானே? ஆரேன் அமெரிக்காவிலையும், ஆபிரிக்காவிலையும் இருந்து வந்து காட்டிக் குடுத்தவங்களே? அப்ப உவங்கள் ஒண்டு சேந்திட் டம் எண்டு சொல்லுறதெல்லாம் பம்மாத்தெல்லே? அப்ப உவங் கடை கதையை கதைக்காதை வேறை ஏதேனும் இருந்தால் சொல்லு?

- எண்டு ஐயா ஒரு பிரசங்கத் தையே நடத்தி முடிச்சிட்டார்.

அப்ப அது கிடக்கட்டும். சீ.எம் குமார், சுரேஸ் எல்லாரும் சைக்கிள்ளை சேரப் போயினமாம். அதுக்கு என்ன சொல்லுறியள்? எண்டு கேட்டதுக்கு... அவை சேரட்டும். சேந்து பாக்கட்டும். சேந்து காட்டட்டும். அவையளை உடைச்சுச் சுக்கு நூறாக்கிறதுக்கு எத்தினை பேர் பாத்துக் கொண்டு இருக்கினம். நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அடுத்த எலக்சனைப் பாத்துக்கொண்டு இருக்கிற மற்றக் கட்சியள் தொட்டு, றோ, கோ, போ எண்டு, புலனாய்வெண்டு, அவை அவையின்ரை சோத்தை நக்கித் தின்னப் பாத்துக் கொண்டு இருக்கிற அவையின்ரை எடுபிடியள் எண்டு, பத்திரிகையிலை தங்கடை எழுத்துகளைப் பெரிசாக் காட்ட எழுதிற நாறிப்போன பேப்பர் காறர் எண்டு எத்தினை கிருமிகள் அவையளைச் சேரவிடாமல் தமிழற்றை எதிரியளைப் பாதுகாக்கப் பாத்துக் கொண்டிருக்கினம். எண்டு ஐயா சொல்லிப்போட்டாராம்.

ஐயா எப்பவும் உப்பிடித்தான். கேட்டால் எல்லாத்துக்கும் சரியாப் பதில் சொல்லிப்போடுவர். சமாளிக்கத் தெரிஞ்ச மனுசன். அதாலைதான் இந்த வயசிலையும் தள்ளாடித் தள்ளாடி விழுந்து போகாமல் கூட்டம், பார்லிமெண்ட் எண்டு எல்லா இடத்துக்கும் போய் வாறார். ஆனால் போனவரும் விடேல்லையாம். ஐயாட்டைக் இப்பிடிக் கேட்டவராம்.

ஐயா நீங்கள் உப்பிடிச் சொல்லுறியள். சனம் என்ன சொல்லுது தெரியுமோ? நீங்களும் கள்ளராம். பி.எம் மிட்டைக் காசை வேண்டிக் கொண்டு நீங்களும் நடிக்கிறியளாம். அப்பிடி நடிக்கத் தெரிஞ்ச உங்களுக்கு ஏன் சேந்திருக்கிற மாதிரி நடிக்கத் தெரியேல்லையாம்? நடிப்பெண்டால் எல்லாம் நடிப்புத்தானே? எண்டு சனம் கேட்டதுக்கு என்னாலை ஒண்டும் சொல்லேலாமைப் போச்சுது. அதோடை அவை சொல்லினம் நீங்கள் நல்லா நக்கிப் போட்டியளாம். அதாலை நாவிழந்து போய் நிக்கிறியளாம். அந்த நன்றிக் கடனாலைதான் நீங்கள் கக்கப் பயப்பிடுறியளாம்.- எண்டு நான் சொன்னதுக்கு வாய் திறந்து ஒண்டும் சொல்லாமல் ஆள் காட்டி விரலை உயத்திக் காட்டிப் போட்டு எழும்பிப் போயிட்டாராம். போகேக்கையும் துண்டைத் தலையிலை போட்டுக் கொண்டு அந்தக்காலத்திலை சனம் பனைக்குப் போனமாதிரித் தான் போனவராம். எப்பிடி இருக்கு ஐயான்ரை அரசியல்?

- கோளரங்கன்

---

### இமையத்தின்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணி காரணமாகத்தான் அவர் என்னிடம் பேசுகிறார்,பழகுகிறார் என்கிறாள். இப்படியாகச் சந்தேகம் நாளுக்கு நாள் அதிகரிக்க முழுவதும் மனமுடைந்து போன விநாயகம் தன் வாழ்க்கையில் அடுத்து என்ன செய்கிறான். கமலாவை மனம் மாற்றுகிறானா? இல்லை கமலாவையே மறக்கிறானா? என்பதே மீதிக் கதை.

தன் கொள்கையை எவருக்காகவும் மாற்றிக்கொள்ளாத பெண், அப்படிப் பட்டவளிடம் பாசம் எதிர் பார்க்கும் ஆண். இவர்களைப் படித்து முடிக்கும் பொழுது மனம் முழுவதும் ஒரு பாரம் இருக்கிறது. கமலா அவனுக்காக இறங்கி வந்திருக்கலாம். விநாயகமாவது அவளைச் சந்தேகப்படாமல் இருந்திருக்கலாம். கமலாவும் பாவம் தானே. ஒரு கைம்பெண்ணாகத் தன் பெண் குழந்தைகளின் பாதுகாப்புக்காக இப்பிடி இருந்தால் தான் சரி. விநாயகம் அவளை மறந்து வேறு நல்ல வாழ்வைத் தேடி இருக்கலாம். இப்படியாக நம்மை தவிக்க வைக்கிறார் ஆசிரியர். அந்தவகையில் இமையம் எழுதிய நாவல்களில் என்னளவில் இந்நூலுக்குத் தனியிடம் உண்டு என்று சொல்வேன்.

### கிரேஸி....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடகங்களிலும் சரி, திரைப்படங்களிலும் சரி, இந்த இயல்பை அவர் விட்டதில்லை. வசூல்ராஜா எம்பிபிஎஸ் படத்தில்கூட கொஞ்சமும் அலட்டலே இல்லாமல் அவர் நடித்தது மறக்கமுடியாதது.

மற்ற தமிழ் அமெச்சூர் நகைச்சுவை நாடக சகாக்களைப் போல எரிச்சலூட்டும் நகைச்சுவை இவரிடம் இருப்பதில்லை. உடல் ஊனமுற்ற, மனநலம் குன்றியவர்களைப் பற்றிய நகைச்சுவைகளை ஒரு கட்டத்துக்குப் பிறகு நிறுத்திக்கொண்டு, அத்தகைய ஆரம்ப கால எழுத்துகளுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டவர். வசூல்ராஜாவுக்குப் பிறகு கமல் அவரை ஒதுக்கிவிட்டாலும் உண்மையில் நஷ்டம் கமலுக்குத்தான். பி.ஜி.வோடெளஸ் அவருக்கு விருப்பமான எழுத்தாளர் என்று முன்பொரு பேட்டியில் சொல்லியிருந்தார். அவருடைய பாதிப்பு கிரேஸி மோகனிடம் நிறைய உண்டு.

எப்போது நினைத்தாலும் ரசித்துச் சிரிக்க வைக்கும் அவருடைய எண்ணற்ற நகைச்சுவை வசனங்கள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வருகின்றன. தமிழர்களை அதிகம் சிரிக்க வைத்த கலைஞன்
கிரேஸி மோகனாகவே இருக்கவேண்டும். முதல்முறையாக அழவைக்கிறார். அன்னாருக்கு எனது அஞ்சலிகள்.

### ஒரு மரத்தின்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் தகவல்களை 4 இராணுவ அதிகாரிகளே வழங்கினர் எனவும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இப்படியான தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது சஹ்ரானின் நடவடிக்கைகளுக்கு வலிமையான அதிகாரபீடம் சகல ஒத்தாசைகளை யும் வழங்கியுள்ளதாக ஊகிக்க முடிகிறது.


அதே வேளையில் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள், வர்த்தக நிலையங்கள் மீதான வன்முறைகள் பேருவளை, அளுத்கம சம்பவங்கள் அனைத்திலும் பொதுபலசேனா வெளிப்படையாகவே ஈடுபட்டபோதிலும் அவற்றுக்காக ஞானசார தேரர் கைது செய்யப்படவில்லை. நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட போதும், அவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டார்.

எப்படிப் பார்த்தாலும் தேசிய தௌபீக் ஜமாத் அமைப்பும், பொதுபலசேனவும் ஒன்றுக்கொன்று விரோதமான நோக்கம் கொண்டவையாகத் தென்பட்ட போதிலும் இரண்டும் ஒரே தரப்பினரால் நீருற்றி பசளையிடப்பட்டு வளர்க்கப்பட்டன என நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை மூலம் உறுதிப்படக்கூடும் என்ற அச்சத்தில் அதை தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றன.

இரு கைகள் சேர்ந்தால்தான் ஓசை எழும் இரு கைகளும் ஒரு உடலுக்கு சொந்தமானதல்லவா?

# ஷரி ஆ பல்கலைக்கழகமும் அரசாங்கத்தின் சட்டமும்

நோக்கன்




கொழும்பு தொடர் குண்டுவெடிப்புகளுக்குப் பின்னால் இலங்கை அரசு பல வழிகளிலும் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது. அந்த வகையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு இணையாகப் பல இடங்களில் முஸ்லிம்கள் அரபு மொழியை உபயோகிக்கத் தொடங்கி இருக்கின்றனர். அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேடமாக காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் சில அடிப்படைவாத இஸ்லாமியர்கள் தோன்றித்தனமாக அரபு மொழியைத் தமது பெயர்ப் பலகையில் பொறித்துத் தமது தாய்மொழி அரபு மொழி எனக் காட்டி வருகின்றனர். இது இந்த நாட்டின் இறைமைக்கு எதிரானதாக உணரப்பட்டதனாலோ என்னவோ அவை உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கும் ஒரு சுற்று நிருபத்தினை அரசு வெளியிட்டிருக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் இதனைத் தெரிவித்துள்ளார் என அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது. அதற்கமைவாக அது தொடர்பான அதிகாரிகள் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்பர் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். பொதுக் கொள்கைகளின் அடிப்படையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலேயே நடவடிக்கை அமைய வேண்டும். அவற்றிற்கு மேலதிகமாக எவற்றிற்கும் சந்தர்ப்பம் இல்லை என்று அமைச்சர் மேலும் கூறியிருந்தார்.

அங்ஙனம் ஏனைய மொழிகளில் பெயர்ப் பலகைகளைக் காட்சிப்படுத்துவதாக இருந்தால் அரசிடம் விசேட அனுமதியைப் பெற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், கிழக்கை அரபு தேசமாக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர் என பள்ளிவாசல சம்மேளனம் குற்றஞ்சாட்டி இருக்கிறது. அதுவும் இக் குற்றச்சாட்டை முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக அவரின் இனத்தைச் சேர்ந்தவர்களே முன்வைத்துள்ளனர். அதுவும் பள்ளிவாசல் சம்மேளனம் இதனை அறிவித்தது.

ஹிஸ்புல்லாவின் இவ்வகையான செயற்பாடுகள் குறித்து காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் நிறுவனங்களின் சம்மேளனங்களின் பிரதிநிதியான அபூஸ ாலி உவைஸ் அதிருப்தி வெளியிட்டுள்ளார். ஆன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தனது பதவிக் காலத்திலேயேதான் காத்தான்குடியை அரபு தேசமாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டார் என சம்மேளத்தின் பிரதிநிதி விசேட நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முன் முன்னிலையாகி இந்தத் தகவலைத் தெரிவித்திருப்பது ஹிஸ்புல்லாவுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது எனலாம்.

அரபு மயமாக்கல் என்பது முஸ்லிம் கலாசாரத்திற்கு உட்பட்ட விடயம் அல்ல எனவும் அது சவூதி அரேபியாவில் ஏனைய நாட்டுப் பிரஜைகளை வெளியேற்றுவதற்காக அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கொள்கை எனவும் அவர் சொல்லி இருக்கிறார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் ஜயம்பதி விக்கிரமரத்னவின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார். முஸ்லிம்களின் மதவாதச் செயற்பாடுகளுக்கு அரபு மயமாக்கல் உதவவில்லை என்பதை நிராகரித்து புனித குர் ஆனை விளங்கிக் கொள்வதற்காகவே அரபு மொழியைப் படிப்பிக்கின்றனர் என்றும் அதற்காகக் காத்தான்குடியில் அரபு எழுத்துச் சின்னங்களைப் பொறித்து அதனை முதன்மைப்படுத்துவது அவசியம் இல்லை எனவும், ஹிஸ்புல்லா தான் பதவியிலிருந்தபோதே இப்படியான பேதமைகளை உருவாகாக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்திருக்கிறார் எனறும் அறிய முடிகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சஹ்ரான் 5ஆம் ஆண்டுவரை படித்தவர். காத்தான்குடியிலுள்ள அரபு நிலையத்திலும், குருநாகலிலுள்ள ஒரு மதரஸாவிலும் தனது அரபு மொழிக் கற்றலை மேற்கொண்டிருந்தாலும் அவரால் ஒரு சிறந்த மௌலவியாக வர இயலவில்லை எனவும் அவரது மதச் செயற்பாடுகளைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததாகத்தான் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததாகவும் அதன்பின்னர் தாம் அவருக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை எடுத்ததாகவும் அபுஸாலி உவைஸ் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இதன் நடுவே முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா தன்னிச்சையாகத் தொழில்பட்டுப் பல கோடி ரூபாவை நாட்டிற்குள் கொண்டு வந்து தனது மகன் அடங்கிய ஒரு குழு சார்ந்த வணிக நிறுவனத்தை நிறுவி அதனூடாக ஷரிஆ பல்கலைக்கழகத்தை நிறுவியிருக்கிறார். தெற்காசியாவில் மிகப்பெரிய இனவாத ஸ்தலமாகவும், ஷரிஆ சட்டம் மற்றும் இஸ லாம் பயங்கரவாதத்தை கற்பிக்கும் இடமாகவும் இந்த மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் உள்ளது என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்ன தேரர்.




இதற்குப் பல இஸ்லாமிய நாடுகளில் இருந்து.பணம் கிடைத்துள்ளதெனவும் இதனை ஒரு முஸ்லிம் நாடாக மாற்றுவதற்குரிய செயற்பாடுகளே இவை எனவும் அவர் சொல்லி இருக்கிறார். முன்பு பங்களாதேஷ் ஒரு பௌத்த நாடாகத்தானிருந்தது. அதை இவர்கள் ஒரு முழுமையானதொரு முஸ்லிம் நாடாக மாற்றி விட்டார்கள். அது போன்ற இலங்கையையும் மாற்ற முயற்சிகளை மேற்கொள்வதாகவும் தேரர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

அதனால் இந்த மட்டக்களப்புப் பலகலைக் கழகத்தை அரசு பொறுப்பேற்று இராணுவத்திற்குத் தொழில் நுட்டக் கலவியைப் போதிக்கின்றதொரு பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டும் என்பது தேரரின் விருப்பமாகத் தெரிகிறது. அத்துர்டன் தீவிரவாதிகள் பயங்கரவாதச் செயல்களுக்குப் பயன்படுத்தக் கூடிய தொழில்நுட்பம் என்ன வென்று அறிந்து அதற்கெதிராக இந்தப் பல்கலைக்கழகத்தை ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்ற அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேரர் ஓர் ஊடகச் சந்திப்பில் சொன்னதாகவும் தகவல்கள் உண்டு.

மொத்தத்தில் இவ்வகையான தான்தோன்றித்தனமாக முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும். நாட்டின் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க கூடியதாக இனம், மதம், மொழி சார்ந்து எடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்த அரசு உடன் விரைந்து நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் பட்சத்தில் குண்டுகள் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு அப்பால் சென்று பல இடங்களிலும் வெடிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்து வருகின்றனர்.

நடைபெற்றிருக்கின்ற அனைத்தையும் அரசியலாகப் பார்க்காமல் அதன் பின்னணி என்ன வென்று அறிந்து அதன் சூத்திரதாரிகள் யார் என்று கண்டறியப்பட்டு அவர்களைச் சட்டத்திழன் முன்னிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்று சமாதன விரும்பிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். தற்போது நடைபெற்றிருக்கும் முஸ்லிம் பயங்கரவாதச் செயற்பாடுகளை முஸ்லிம் இனத்தவர்களே முழுமையாக ஏற்றுக் கொள்ளாது காணப்படுகின்றவேளை அரசு விரைந்து அதற்கெதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏன் பின் நிற்கின்றனர் என்று தெரியவில்லை?

அத்துடன் கொழும்பு நகரத்திலமைந்துள்ள சீனக் நிறுவனங்கள் தமது பெயர்ப்பலகையில் பொறித்திருக்கும் சீன எழுத்துகளையும் அகற்ற அமைச்சர் மனோகணேசனின் சுற்று நிருபம் உதவுமா?

தொகுப்பு :- சி.விமலன்

விளையாட்டு செய்திகள்

புதுமதி

# கிரிக்கெட்



இங்கிலாந்து கிரிக்கெட் சபை உலகக் கிண்ணத்தில் பங்குபற்றும் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பணம் மற்றும் காசோலைகளுக்குப் பதிலாக Debit cardகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அட்டை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை செல்லுபடியாகும் என்றாலும் முதற் கட்டமாக லீக் போட்டிகள் முடிவடையும் ஜூலை 6 ஆம் திகதி வரை கொடுப்பனவுகளுக்கான பணத்தை வைப்பிலிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐ.சி.சி. 'உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக எடுக்கப்பட்டுள்ள சிறப்பு நடவடிக்கை இதுவாகும். ஊழல்களை இயலுமானவரை தடுப்பதற்கும் வீரர்களை அதிலிருந்து பாதுகாப்பதற்காகவுமே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளது.

• • •



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் விளையாடிய இம்ரான் தாஹிரை (40 வயது) விட மைதான நடுவர்களில் ஒருவராகக் கடமையாற்றிய இங்கிலாந்தின் மைக்கல் கௌவிற்கு (39 வயது) ஒரு வயது குறைவு என்பது தெரியவந்துள்ளது.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் ரோகித் சர்மா 20 ஓட்டங்கள் பெற்ற போது அவுஸ்ரேலிய அணிக்கெதிராக 2,000 ஓட்டங்கள் குவித்த 4 ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார். இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் சச்சின் டெண்டுல்கர் (3,077) மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வீரர்களான டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் (2,262 ), விவியன் றிச்சர்ட்ஸ் (2,187) ஆகியோர் விளங்குகின்றனர்.

அவுஸ்ரேலிய அணிக்கெதிராக அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்த ஆரம்ப ஜோடியாக இதுவரை 1,152 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டெஸ்மண்ட் ஹெயின்ஸ் - கோர்டன் கிறினிஜ் ஜோடியே விளங்கியது. ஆனாலும் அவுஸ்ரேலியாவுக்கெதிரான போட்டியின் மூலம் 1,273 ஓட்டங்களைப் பெற்று ரோகித் சர்மா - சிகர் தவான் ஜோடி அந்தச் சாதனையை முறியடித்துள்ளது.

இந்தப் போட்டியில் சிகர் தவான் அடித்த சதம் அவரது மூன்றாவது உலகக்கிண்ண சதமாகும். இது ஒட்டுமொத்த உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்தியா பெற்றுக் கொண்ட 27 ஆவது சதமாகும். இதன்மூலம் உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக சதம்(26) அடித்த அவுஸ்ரேலிய அணியின் சாதனையை முறியடித்துள்ளது.

# உதைபந்தாட்டம்




தென்னமெரிக்க நாடுகள் பங்குபற்றும் கோபா அமெரிக்கா உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிறேசிலில் ஆரம்பமாகவுள்ளது. இம்முறை இந்தத் தொடரில் 12 நாடுகள் பங்குபற்றுகின்றன. 1916ஆம் ஆண்டு முதல் இந்தத் தொடர் நடைபெற்று வந்தாலும் 1993 ஆம் ஆண்டு முதல் சிறப்பு அழைப்பாளர்களாக தென்னமெரிக்காவைச் சேராத சில நாடுகளும் அவ்வப்போது இத்தொடரில் கலந்து கொண்டுள்ளன. அந்தவகையில் 1999ஆம் ஆண்டு பரகுவேயில் நடைபெற்ற தொடரில் ஜப்பான் கலந்து கொண்டது.

அதுபோல இம்முறையும் ஜப்பானோடு கட்டாருக்கும் சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெறும் முதல் போட்டியில் பிறேசில் - பொலிவியா அணிகள் மோதுகின்றன. பிறேசிலின் நட்சத்திர வீரரான நெய்மர் காயம் காரணமாக இத்தொடரில் இருந்து விலகியுள்ள நிலையில் அணித்தலைவராக டானி அல்வெஸ் நியமிக்கப்பட்டுள்ளதோடு நெய்மருக்குப் பதிலாக செல்சி அணி வீரரான வில்லியன் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார். கோபா அமெரிக்கா தொடரில் 8 தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற பிறேசில் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிண்ணம் எதனையும் கைப்பற்றவில்லை.

இத்தொடரின் நடப்புச் சம்பியனாக சிலி விளங்குகின்றது.

• • •






8ஆவது உலகக் கிண்ண மகளிர் உதைபந்தாட்டப் போட்டிகள் பிரான்சில் தற்போது நடைபெற்று வருகின்றது. கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டிகள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. 24 நாடுகள் பங்குபற்றும் இந்தத் தொடரில் 6 குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டு லீக் சுற்றுப் போட்டிகளின் முடிவில் ஒவ்வொரு குழுவிலும் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகளோடு மூன்றாமிடத்தில் அதிக புள்ளிகளைப் பெறும் 4 அணிகளும் நொக்கவுட் சுற்றுக்குத் தகுதிபெறும்.

இந்தத் தொடரில் ஆசியா சார்பில் ஜப்பான், தென்கொரியா, தாய்லாந்து, சீனா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன. ஆண்கள் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைப் பொறுத்த வரையில் எந்தவொரு ஆசிய நாடும் சம்பியன் பட்டத்தைப் பெறாத போதிலும் பெண்கள் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் 2011 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற தொடரில் ஜப்பான் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. இத்தொடரின் நடப்புச் சம்பியனாக அமெரிக்கா விளங்குகின்றது. இத்தொடரின் விசேட அம்சம் 2018 ஆம் ஆண்டு ஆண்கள் உலகக் கிண்ணத் தொடரில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டு வெற்றியளித்த நடுவர்களின் முடிவை மறுபரிசீலனை செய்யும் Video Assistant Referee தொழில்நுட்பம் இங்கும் பயன்படுத்தப்படுகின்றமை.

# றென்னிஸ்

நடைபெற்று முடிந்த பிரெஞ் ஓப்பன் தொடரில் 12 ஆவது தடவை சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபெல் நடால் 2008, 2010 ஆம் ஆண்டுகளில் விம்பிள்டன் தொடர்களில் சம்பியன் பட்டம் வென்றதற்குப் பிற்பாடு விம்பிள்டனில் கிண்ணம் எதனையும் வெல்லவில்லை. கடந்த வருடம் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் அரையிறுதிப்போட்டியில் ஜோகோவிச்சிடம் தோல்வியடைந்தார். முன்னதாக 2009 மற்றும் 2016 ஆம் ஆண்டுத் தொடர்களில் முழங்கால் காயம் காரணமாக அவர் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்தவாரம் விம்பிள்டன் தொடர் குறித்து நடால் 'எல்லோருக்கும் தெரியும் நான் புற்தரையிலும் விளையாட விரும்புகிறேன் என்று. ஆனாலும் 10 வருடங்களுக்கு முன்னர் தொடர்ச்சியான வாரங்கள் விளையாடியதைப் போன்று தற்போது என்னால் விளையாட முடியாது. ஆதலால் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள விம்பிள்டன் தொடருக்கு முன்னதான பயிற்சிப் போட்டிகளில் கலந்து கொள்ளாமலே என்னைத் தயார்படுத்தி களமிறங்கவுள்ளேன்' என அறிவித்துள்ளார்.

• • •

கடந்த ஜனவரி மாதம் வலது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக றென்னிஸ் போட்டிகளில் இருந்து விலகிய ரஷ்யாவின் மரியா சரபோவா நாளை மறுதினம் ஸ்பெயினில் ஆரம்பமாகவுள்ள மல்லோர்கா ஓப்பன் தொடரில் பங்குபற்றவுள்ளதாக கடந்தவாரம் அறிவித்துள்ளார். இந்த றென்னிஸ் தொடர் ரபெல் நடாலின் மாமனாரும் அவரது முன்னாள் பயிற்சியாளருமான ரொனி நடாலால் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 15.06.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.